உ

கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—சசு.] விக்ருதி-ஞூ ஆனி—ஆடிமீ [பகுதி—அ, கூ.
Vol. 46. June—August 1950 No. 8, 9.

உள்ளுறை.

திருக்குறட்காலத்து அரசியன்முறை:—	திரு. S. சுந்தரராஜையங்காரவர்கள், M.A., M. LITT.	கருரு—கருகூ
நாடி பரீக்ஷை:—	ஒரு மருத்துவர்	கசு0
திருவாசக நீத்தல் விண்ணப்பம்:—	திரு. மஹாமஹோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள்	கசுக—கசுஅ
நாலடியார் இருவருரைத்திருத்தம்:—	திரு. சத்தியவாகீசுவரையவர்கள்	கசுகூ—கஎசு
திருக்குருகூர்த் திருப்பணிமாலை:—	திரு. L. ஆதிநாதபிள்ளையவர்கள்	கஎஎ—கஅ0
ஐயவினாத்தொடர்:—	ஒருமாணவன்	கஅக—கஅங
அம்பிகைநவமணிமாலை:—	திரு. த. ச. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள்	கஅச—கஅரு
தமிழெழுத்துச் சீர்திருத்தம்:—	திரு. D. மனுவேல் அவர்கள் B.A., L.T.	கஅசு—கஅஅ
மதிப்புரை:—		கஅகூ—ககூஉ

பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1950.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. K. Ramanuja Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

S சிவஸ்வாமி,

மானேஜர்.

உ
கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-சசு.] விக்ருதிஸு ஆனி—ஆடிமீ [பகுதி-அ, கூ.
Vol. 46. June—August 1950 No. 8, 9.

திருக்குறட்காலத்து அரசியல்முறை

திரு. S. சுந்தரராஜையங்காரவர்கள், M. A., M. LITT.
(Asst. Professor of History, American College, Madhurai)

நாகரிகத்திலும் பண்பாட்டிலும் முதிர்ந்திருந்த பண்டைத் தமிழர் அவ்வாறே வியக்கத்தக்கதொரு அரசியலையும் பெற்று ஆண்டுவந்தனர் என்ற கருத்தே பெருவழக்காயுள்ளது. முற்காலத்திலே திறமைமிக்க அரசியல்நிர்வாகக்குழுக்கள் இருந்தன என்று அறிகிறோம். அவை சிறந்தஉறுதிப்பொருள்களாகிய அறம் பொருள் இன்பம் என்பவைகள் அடங்கிய முப்பாலை உருவாக்குவதில் பேருதவியாயிருந்ததோடு சமூகநிலையினை அறிய ஏதுவாயுமிருந்தன. ஆனால் இவ்வரசியல்வளர்ச்சி படிப்படியாக ஏற்பட்ட ஒரு முன்னேற்றமாகும். ஒரு தலைவனிடமிருந்து தோன்றிய சாதாரணமான இவ்வரசியல் பரிணாமமுறைப்படி நாளடைவில் பல அங்கங்களையுடைய பலமான மத்திய அரசாங்கத்தையும் மற்றைய சிறுபகுதிகளையும் உடைய சிறந்த அரசியன்முறையாக மாறியுள்ளது. இத்தகைய செய்தியை விளக்கிக்காட்டும் திருக்குறள் தென்னிந்திய அரசியல்வரலாற்றிலே ஒரு சிறந்த கருவூலமாகத் திகழ்கிறது.

தமிழரது அரசியன்முறையின்வளர்ச்சியிலே திருக்குறள் ஒரு முக்கியநிலையை உணர்த்துகிறது. அரசன் தன் விருப்பப்படி நாட்டை ஆள இயலாது. நாடாளும்பணிகளைப் பலரும் பகிர்ந்து கொள்ளவேண்டியது அவசியமாயிற்று. மத்திய அரசின் வேலைகளும் சிறுபகுதிகளின்வேலைகளும் வரையறுக்கப்பட்டன. இவ்வாறு உள்ள சிறதொகுதிகளின் கூட்டுறவே ஒரு மத்திய அரசாக அமையும்.

சிறுபகுதிகளெல்லாம் பெரும்பாலும் ஜனநாயகமுறையிலேயுள்ளன. அதிகாரம் பலரொடு பங்கிடப்பட்டுள்ளது. மத்திய அரசு சிறுபகுதிகளை மேற்பார்வையிடுவதிலும் நாட்டிலே சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதிலும் வெளிநாட்டார்படையெடுப்பிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதிலும் தனதுகருத்தைச் செலுத்திவந்தது. நாட்டின் குறிக்கோள் பெரும்பான்மையினரான மக்களின் மகிழ்ச்சியேயாகும். இதுவே வள்ளுவர்காணும் நாட்டின் உயர்நிலை.

வேறுவிதமாகக்கூறுவோமேயானல் மக்களின் ஒழுக்கநலமும் உலகியலுயர்வுமே நாட்டின் சிறந்த பொக்கிஷமாகக் கருதப்பட்டன. அவற்றை அடையும் வழி வகுத்தலே முப்பால்கூறும் திரண்ட கருத்தாகும். நாட்டின் உயர்நிலை மக்களையும் மன்னனையும் பொறுத்ததாகவேயுள்ளது. மன்னன் பொருளீட்டுவதிலும் புலனுகர்ச்சியிலும் இன்பத்திலும் ஒழுக்கத்தினைக் கடைப்பிடிக்கப்வேண்டியவனுவான். இவற்றில் எந்தவொன்றிலாவது மிகையாக ஒழுகினல் அது அவனுக்குக் கேட்டினை விளைவிக்கும்.

ஆகவே, முப்பாலானது அரசன் இவற்றிலெல்லாம் மிதமாக இருக்கவேண்டுமென்றே கூறுகிறது. அரசியலிற் சிறந்தகருத்துக்களெல்லாம் பெரும்பாலும் ஒழுக்கத்தினையும் பண்பாட்டினையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. விரும்பியமுடிவையடைய எத்தகைய வழியையும் பின்பற்றுதல் திருக்குறளுக்கு ஒத்தகருத்தன்ரும். சான்ருேர்பழிக்கும்வினையினைச் செய்யாமையே சிறப்பாகும்.

இக்கருத்து, அவசியத்தின்போது நாட்டுநலனைக்கருதித் தவறான முறையையும் கைக்கொள்ளலாம் என்ற மாக்வில்லி (Machiavali) யின் கருத்தோடு மாறுபடுகின்றது.

அரசன்.—அரசன் நன்கு பாதுகாக்கப்பட்ட கோயிலிலே வசிப்பான். அரசனுக்குரிய பணியாளரேயன்றி அறிவுரைகூறப் பெரியோரும் அமைச்சரும் அவனைச் சூழ்ந்திருப்பார். அரசனது போலைக் கூட்டங்களுக்குச் செல்வரும் பொதுமக்களும் திரண்டுசெல்வது வழக்கம். மாகதர் வைதாளிகர் என்ற அரசனைப் புகழ்ந்தேத்துவோரும் அங்கிருப்பர். அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்ற இவை குறையாதிருப்பவனே அரசனாவான். மேலும் அவன் அறத்தினைப் பாதுகாத்து மறத்தினைக் கடியவேண்டும். அறநெறிபற்றி ஒழுங்காக அரசாளவேண்டும். இன்சொல்லும் தண்ணளியும் அவனுக்கு இன்றியமையாப்பண்புகளாகும். பொருளீட்டும்வகையறிந்து நிதியறையைப் பெருக்கவேண்டும். காட்சிக்கெளியனும் கடுஞ்சொல்லற்றவனும் விளங்கவேண்டும். கல்வியறிவும் ஒழுக்கமும் கட்டுப்பாடும் அவனிடத்துச் செறிந்துவிளங்கவேண்டும். ஏனெனில், கல்லாதமன்னனால் நாடு நலமடையாது. வினைசெய்யுங்கால் அதனால் ஏற்படும் அழிவினையும் பின்னர் ஏற்படும் ஊதியத்தினையும் முன்னரே ஆராய்ந்துகாணுந்திறத்தை மன்னன் பெற்றிருக்கவேண்டும். அறிவால் மூத்த பெரியோரைத் துணையாகக்கொண்டு அவர்களுடன் ஆலோசித்தபின்னரே எதையும் செய்யத்துணியவேண்டும். அரசனுக்கு உற்ற துன்பத்தைப் போக்கும்வழியையறியும் ஆற்றலுள்ள பெரியோர் அவனுக்குக் கண்போன்றமைவர். அத்தகையோர்நட்பு அவனுக்குச் சிறந்த நலத்தைத்தரும். அரசன் எந்தத் தொழிலையும் ஆராய்ந்து முற்ற எண்ணிப்பாராது அவசரப்பட்டுத் தொடங்கலாகாது. வினைமேற்செல்லுங்காலத்து அதனால் ஏற்படும் பலாபலனைச் சீர்தூக்கிப்பார்த்து ஊதியம் பயப்பதாயின் மேற்கொள்ளலே சிறந்ததாகும். போரைமேற்கொள்ளுங்காலத்துப் பகைவன் தனதுவலியையறியாதவகையில் முன்னேற்பாடுசெய்யவேண்டும். இல்லையெனில் பகைவனால் இவனது வலிமை அறுக்கப்படும்.

அரசாங்க அலுவலாளர்கள் அரசனல் குற்றமற்றவர் என்று நன்கு அறியப்பட்டபின்பே நியமிக்கப்படவேண்டும். அறம் பொருள் இன்பம் உயிர்ப்பொருட்டான்வரும் அச்சம் ஆகிய இவற்றிலே அவரது மனவியல்பை ஆராய்ந்தபின்னரே அவர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அவ்வாறு தேருங்காலத்துக் குணமிக்கிருந்து குற்றம் குறைந்திருந்தால் அவனே ஏற்றுக்கொள்ளத்தக்கவன். அதன்பின்னரே அரசனுக்குரிய முக்கியவேலைகள் அவனிடம் ஒப்படைக்கப்படும். வினையாளன் நாட்டின் நலத்திலே கருத்துள்ளவனாக இருக்கவேண்டும். வேலையை மேற்கொண்டபின்பும் அவர்கள் தம் கடமையை நன்றாக நிறைவேற்றுகின்றனரா என்பதை யறிய ஒற்றர்கள் இருந்தனர். இவ்வொற்றர்கள் பகைவரது திறமன்றியும் உள்நாட்டு மற்றையோரது திறத்தையும் ஆராய்ந்துவந்தனர். அமைச்சர்முதலானவரோடு ஆலோசியாது அநீதிபுரிந்து மக்களுக்குக் காட்சிக்கு அரியவனாக உள்ள கொடுங்கோல்மன்னன் மக்களது மதிப்பை இழந்துவிடுவான்.

அரசன் குடிகளிடமிருந்து ஆறிலொருபங்கை வரியாகப்பெறுவான். பலவகையான வரிகளை நாம் இக்காலத்திலே கேட்கின்றோம். 'வரிச்சுமைதாங்கமுடியவில்லை' என்று இப்போது மக்கள் கூறக் கேட்கிறோம். அத்தகைய மனக்கசப்பு முற்காலத்திலே இல்லை. அவ்வாறு குடிகளை வருத்திப் பொருள்பெறுவோனை வள்ளுவர்,

> "வேலொடு நின்றான் இடுவென் றதுபோலுங்
> கோலொடு நின்றான் இரவு"

என்று வழிப்பறிசெய்யும் கள்வனுக்கு உவமித்துக்கூறுகிறார். வரிகொள்ளும் முறையைப் புறநானூற்றிலே பிசிராந்தையார் பாண்டியன் அறிவுடைநம்பியைநோக்கிக் கூறும் பாடல் நோக்கத்தக்கது. காய்த்தநெல்லையறுத்துக் கவளமாகக்கொள்ளின் ஒருமாவிற் குறைந்தநிலத்திற் கதிரும் பலநாளைக்காகும். நூறுசெய்யாயினும் யானை தனித்துப்புகுந்து உண்ணுமாயின் அதன் வாயிற்புகுந்த நெல்லினும் காலால் அழியும் நெல் மிகவும் அதிகமாகும். ஆதலால் அறிவுடைய அரசன் வரிகொள்ளும்முறையை அறிந்து கொள்ளின்

அவன் நாடு கோடிபொருளினைத் தேடிக்கொடுத்துத் தானும் மிகவும் தழைக்கும். இந்த முறையிலே வரிவசூலித்தால் ஒரு அரசன் செங்கோலாட்சிபுரிபவனாகக் கருதப்படுவான். அரசனுடைய அங்கங்களாகக் கருதப்படுவன ஆறாகும். அவை, படை நாடு பொருள் அமைச்சு நட்பு அரண் என்பனவே.

அமைச்சர்:—அரசனுக்குரிய ஆறங்கங்களுள் முதன்மையாகக் கருதத்தக்கது அமைச்சு. அமைச்சனுக்கு அரசியலிலே பொறுப்பு அதிகமுண்டு. அமைச்சன் நூலறிவோடு மதிநுட்பமுமுடையவனாகத் திகழ்தல்வேண்டும். வினைசெய்யுங்காலத்து அதற்கு வேண்டும்பொருளையும் கருவிகளையும் அதற்கேற்ற காலத்தையும் அதைச்செய்யும் வகையினையும் அவற்றாலே செய்யப்படும் வினையினையும் தீர்க்கமாக எண்ணவல்லவனே அமைச்சனாவான். வினையை மேற்கொள்ளுங்காலத்து மனஉறுதியும் குடிகளைக் காக்கும் பண்பும் நீதிநூல்களுக்கு ஏற்பச் செயலாற்றும்வழியினையுணருந் தன்மையும் முயற்சியும் உடையவனே சிறந்த அமைச்சனாவான். நூலறிவோடு உலகியலுக்கு ஏற்பச் செயலாற்றும் மதிநுட்பமும் அமைச்சனது சிறந்தபண்பாகும். உண்மையையேயன்றிப் பொய்யினை மனத்தும் நினைக்கலாகாது. வினைக்கண் தூய்மையும் அதைச் செய்யுங்கால் மனத்திட்பமும் அமைச்சனுக்குரிய இன்றியமையாத பண்புகளாகும். ஒவ்வொருதுறையிலும் புலமைபெற்றோரைக் கலந்து அமைச்சன் தொழில்செய்வானேயாகில் அது சிறந்த பலனைத்தரும்.

அரசனுக்கு மந்திராலோசனைகூறக் கற்றறிந்தோரடங்கிய அவைகள் இருந்தன. நாட்டினைப்பற்றியசெய்திகளை அவையிலே அமைச்சன்கூறுங்காலத்து அவையினது இயல்பையறிந்து வழுப்படாமல், தெளிவாக்கிக் கூறவேண்டும். அம்மட்டோடன்றிச் சொல்லுவதை அவைக்கஞ்சாது அவையார் மனங்கொள்ளும்வகை சொல்லவேண்டும். அமைச்சர்குழுவிலிருந்தே வேற்றுநாடுகளுக்குத் தூதுவர் அனுப்பப்படுவர். பிறநாடுபற்றியசெய்திகளை அறிவிக்கும் ஒற்றரும் அரசனுக்கு மிக்க துணையாகவிளங்கினர்.

நாடு:—அடுத்த அங்கமாகக்கூறப்படுவது நாடு. குறிப்பிட்ட நிலப்பரப்பினையும் குன்றாதவிளையுளையும் அறிவோரையும் கேடில்லாச்செல்வமுடையோரையும் பெற்றுவிளங்குவதே சிறந்தநாடாகும். பிணியின்மை செல்வம் குன்றாதவிளைவு இன்பம் காவல் என்ற ஐந்தும் ஒருநாட்டிற்குச் சிறந்த அணியாகும். பொதுவாகக்கூறுமிடத்துப் பிறநாட்டினைநாடாது தானே மிக்கவளத்தையுடையதே சிறந்தநாடாகும். வள்ளுவர்சித்தரிக்கும்நாடு உண்மையிலே யாவரும்விரும்பத்தக்க சிறப்பியல்புகளையுடையதாகும். சிறப்புவாய்ந்தநாட்டுக்குப் பாதுகாப்பு அவசியமாகும்.

அரண்:-மூன்றாவதாகக்கூறப்படுவது அரண். பலம்பொருந்திய அரணை நாட்டிற்குச் சிறந்த பாதுகாப்பாகக் கருதப்பட்டது. உயர்வு அகலம் திண்மை அணுகுவதற்கு அருமை ஆகிய இந்நான்கும் மிகுந்திருத்தலே அரணுக்குச் சிறப்பியல்புகளாகும். காக்கப்படும் இடம் சிறியதாயும் அகன்ற இடத்தையுடையதாயும் விளங்குவதே அரணின் சிறந்த இலக்கணமாகும்.

பொருள்:—அரசுக்குரிய அங்கங்களுள் நான்காவதாகக்கூறப்படுவது பொருள். தீதின்றிவந்த பொருள் அறத்தையும் இன்பத்தையும் கொடுப்பதோடு பகையென்னும் இருளையும் கெடுப்பதால் அதைப் பொய்யாவிளக்கு என்று வள்ளுவர் சிறப்பிக்கின்றார். உடையாரின்மையானே தானேவந்த பொருளும் சுங்கமாகவரும் பொருளும் பகைவரிடத்துத்திறையாகக்கொள்ளும் பொருளும் அரசனுக்குரியபொருள்களாகும்.

படை:—ஐந்தாவதாகக்கூறப்படுவது படையாகும். மாறுபட்டகுழுக்களும் கள்வர் முதலிய உட்பகையும் நாட்டுமக்கட்குத் தீங்குவிளைப்பன. அரசன் இவைகளினின்று நாட்டைக்காவானாயின் மக்கள் துன்புறுவர். ஆகவே சிறந்தபடையும் மன்னனுடைய உறுப்புக்களுள் ஒன்றாயிற்று. யானை முதலிய நான்கு உறுப்பானும் நிறைந்து போரிலே புண்படுவதற்கு அஞ்சாதுநின்று பகையை வெல்லும் வல்லமையுடைய படை அரசனுக்குச் சிறந்த செல்வமாகும். போரின்கண் கெடாததாய்ப் பகைவாற்கீழறுக்கப்படாததாய் மிக்க தறுகண்மையையுடையதாயிருப்பதே சிறந்த படை

யாகும். கூற்றுவனே எதிர்த்துவந்தாலும் அதற்குக்கூட அஞ்சாத ஆற்றலையுடையதே படையாகும். படை தோற்றப்பொலிவுபெற்று விளங்கவேண்டும். படை எத்தகைய சிறந்த வீரரைப்பெற்றிருந் தாலும் தனக்குத் தலைவராகிய வீரரில்லாதகாலத்து வெற்றி பெருது. வீரர் மறமிகுந்தோராய்விளங்கினர். வீரனெருவன் தனது கடந்தநாட்களையெல்லாம் எண்ணிப்பார்த்து அவற்றுள்ளே விழுப்புண்பெருதநாளையெல்லாம் பயனற்றநாளாகக் கருதுவான் என்று சிறப்பிக்கப்படுகிருன். இதிலிருந்து படைச்சிறப்பினையும் மறத்தின்மாண்பினையும் ஒருவாறு உணரலாம்.

நட்பு:—ஆருவது அங்கமாகக் கூறப்படுவது நட்பாகும். பண்புடையாளரோடு செய்துகொள்ளும் நட்பைவிட வேறு சிறந்த பொருள் இல்லை. துன்பமுற்றகாலத்து உடுக்கையிழந்தவன்கை போல உடனே அதைக் களைவதே நட்பின் உயரியபண்பாகும். ஒருவனது குணம் செய்கை முதலியவற்றை நன்கு ஆராய்ந்தபின்னரே நட்புச்செய்யவேண்டும். தீநட்பினை அறவே நீக்கிப் பழமைபற்றி வந்த நட்பைப் போற்றவேண்டும்.

வள்ளுவர் இறைமாட்சியையே பெரிதும் சிறப்பித்தாராயினும், அரசனைப் பலவகைக் கட்டுப்பாடுகளுக்குட்பட்ட ஒரு சட்டபூர்வமான தலைவனுகவே சித்தரித்துள்ளார்.

நாடிபரீக்ஷை

க. மாதங்களில் நாடிபார்க்கும் காலம்

சித்திரை வைகாசிக்குச் செழுங்கதி ருதயம் பார்க்க;
அத்தமாம் ஆனி ஆடி ஐப்பசி கார்த்திகைக்கு
மத்தியானத்திற் பார்க்க, மார்கழி தை மாசிக்கு
வித்தகன் கதிரோன் மேற்கே வீழும் வேளையினிற் பாரே.

மானமார் பங்குனிக்கும் வளம்நிறை ஆவணிக்கும்
ஆனதோர் புரட்டாசிக்கும் அர்த்தராத்திரியிற் பார்க்க;
தேனென மூன்று நாடி தெளியவே காணும் என்று
கானமா முனிவர் சொன்னார் காரிகை வேத நூலே.

உ நாடிபார்க்கிற் பலித்திடாக்காலம்

எண்ணெய்பெய் திருந்த போதும் ஈரமாய் நின்ற போதும்
உண்ணும்நல் லுணவின் போதும் உண்டாம்வெம் பசியின் போதும்
திண்ணமாய் நடக்கும் போதும் சிற்றின்ப மூழ்கும் போதும்
பண்ணிய நாடி பார்க்கிற் பலித்திடா தென்று செப்பே.

ங நாடிபார்க்கும் விவரம்

மருவிடும் நோயின் நாடி மதித்திடில் வலக்கை மைந்தர்க்
கரிவையர்க் கிடக்கை தன்னில் அழுத்தியே சுட்டிக் காட்டும்
விரலதில் வாதமாகும்; மிகுநடு விரலிற் பித்தம்;
தருமணி விரலில் ஐயம் தானியல் பறிந்து பாரே.

குறிப்பு:—நாடிபரீக்ஷை என்னும் தலைப்பிட்டு மேலேகாட்டிய செய்யுட்கள், அகத்தியமுனிவர் அருளிச்செய்த நோயின்சாரம் என்ற நூலின் தொடக்கத்துக் காணப்பட்டவை. இந்த நோயின் சாரம் என்ற நூல் அச்சிடப்பட்டதா? படாததா? என்றகிற விவரம் தெரிகிலேன். செய்யுட்கள் எளியநடையில் யாவரும் படிக்கும்படி அமைந்தனவாகக் காணப்படுதலின் இந்நூலைப்பற்றிய விவரமான செய்திகளை அறிந்துகொள்ளவிழைந்து மேற்குறித்த மூன்று செய்யுட்களையும் இச்செந்தமிழில் வெளியிடலானேன். இந்நூலைப்பற்றிய விவரமான செய்திகளை அறிந்த மருத்துவநண்பர்கள் அவற்றை இச்செந்தமிழ்வாயிலாக வெளியிடுவார்களென்று நம்புகிறேன். அவர்கள் வெளியிடும் செய்திகளால் இந்நூல் அச்சிடப்படாத தென்று வெளியாயின் இச்செந்தமிழ்வாயிலாகவே இந்நூல் முழுவதையும் வெளியிடும் விழைவுடையேன்.

ஒரு மருத்துவன்.

உ

திருவாசக—நீத்தல்விண்ணப்பம்

கதிர்மணிவிளக்கவுரையுடன்.

குறிப்பு:—இவ்வுரையைப்பற்றிய மதிப்புரை சென்ற செந்தமிழில் வெளியிடப்பட்டது. இவ்வுரைநயத்தைச் செந்தமிழ்நேயரும் உணருமாறு மாதிரியாக நீத்தல்விண்ணப்பத்தின் 25, 36-ஆம் பாசுரங்களுக்குரிய உரைப் பகுதிமட்டும் கீழேசேர்க்கப்பட்டுளது. **பத்திராசிரியர்.**

எறும்பிடை நாங்கூ ழெனப்புல னாலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண் டாய்வெய்ய கூற்றொடுங்க
உறுங்கடிப் போதவை யேயுணர் வுற்றவ ரும்பரும்பர்
பெறும்பத மேயடி யார்பெய ராத பெருமையனே.

கருத்துரை:— முன்னைத் திருப்பாட்டில் புலன்களால் உண்டாம் தடையை ஓர் உவமைமுகத்தால் எடுத்துக்காட்டி யிரங்கிய அடிகள், இத் திருப்பாட்டில் அப் புலன்களால் உண்டாம் துன்பத்தையும், அத்துன்பநீக்கத்திற்குத் துணைபுரிவாரில்லாமையால் தமக்கேற் பட்ட தனிமையையும் எடுத்துக்கூறி இரங்குகின்றார்.

பதவுரை:— வெய்ய கூற்று ஒடுங்க-கொடிய கூற்றுவன் வலி குன்றும்படி, உறும் கடிப்போது அவையே உணர்வுற்றவர்-அவ னுடலிற் பொருந்திய மணமிக்க திருவடிமலர்களாகிய அவற்றையே பற்றுக்கோடாக அறிந்தவர்களாகிய சரியையாளரும், உம்பர் உம்பர் - அவரின் மேம்பட்ட கிரியையாளரும் அவரின் மேம்பட்ட யோகநிலையினரும் ஆகிய இவர்கள், பெறும் பதமே-பெறுதற்குரிய (சாலோகமுதலிய) பதமுத்திகளாகவிளங்குகின்றவனே, அடியார் பெயாராத பெருமையனே-அம் மூவரினும் மேம்பட்ட மெய்யன்ப ராகிய சிவஞானிகள் மீண்டுவாராமைக்கு ஏதுவாகவுள்ள (சாயுச்சிய முத்திநிலையாகவிளங்கும்) பெருமையுடையானே, எறும்பு இடை நாங்கூழ் என-பல எறும்புகளின் இடைப்பட்ட நாங்கூழ்ப்புழுவைப் போல, புலனால் அரிப்புண்டு அலந்த-ஐம்புலன்களாலும் தின்னப் பட்டு வருந்திய, வெறும் தமியேனை விடுதி-பயனற்ற தமியனாகிய என்னை விட்டுவிடுவாயோ? (விடலாகாது) என்பது.

விளக்கவுரை:— இறைவன்கட்டளைப்படி தன் கடமையைப் புரியும் தருமனை "வெய்யகூற்று" என்றது, கட்டளையிட்ட அப் பெருமான்திருவுள்ளக்குறிப்பிற்கு மாறுபடத் தவமுதல்வராகிய மார்க்கண்டேயரை உயிர்கவரமுற்பட்ட தீச்செயல்பற்றி யென்க. கடமையைமேற்கொண்டது எங்ஙனம் தீச்செயலாகும்? எனின் "இறைவநிற்கு உவந்தது அறமெனப்படும்; மற்றேனைய மறமெனப் படுமால்" என்னும் சமய உண்மைப்படி விதி விலக்குச் செயல்க ளெல்லாம் ஆண்டவன்முன்னிலையில் மாறுதல் எய்துமாதலின் ஆகுமென்க. கண்ணப்பர் இட்ட ஊனுணவு விலக்கப்பட்டதெனக் கொண்டு வெறுத்த சிவகோசரியார்க்கு "அவனுகந்திட்ட விறைச்சி யெனக்கு நன்மாதவர் இட்ட நெய்பாலவியே"* என்று இறைவன் உணர்த்தியசெய்தியால் விலக்கு விதியாயதுபோலக் கூற்றுவன் கடமையாகிய விதி ஈண்டு இறைவற்கு உவந்ததாக இல்லாமையால் விலக்காயிற்றென்பது. மக்கள் தேவர் முதலிய எல்லோரையும் ஒடுக்கும் ஆற்றல்படைத்த கூற்றுவனது ஒடுக்கத்தைக் குறிப்பிட் டது, சிவபெருமானது முடிவிலாற்றலுடைமையைப் புலப்படுத்தற் கென்க. கடிப்போது-மணமிக்க மலர்; ஆகுபெயராய்த் திருவடியை யுணர்த்தும். மலர்போன்ற இறைவனுடைய திருவடி மெத்தெனத் தாக்கிய அளவில் மிக்க வலிபடைத்த கூற்றுவனது திறல் ஒடுங்கி விட்டதென்பது போதர "உறுங்கடிப்போது" என்றூர். "அவை" யென்பது பண்டறிசுட்டு; தம்மையடைந்தாரது இடையூற்றைப் போக்கி அழிவிலின்பத்தில் தலைப்படுத்தும் இயல்பினவாகிய அத் திருவடிகளையே என்பது கருத்து. ஏகாரம் தேற்றப்பொருட்டு. "புறச்சமய நெறிநின்று ...சிவனடியைச் சேர்வர்"† என்று சைவ நூலிற் கூறியபடி பல பிறவிகளினும் சோபானமுறையால் மேற் சென்றுசென்று அரிய சித்தாந்தசைவத்தையடைந்தவர்கள், சரியைமுதலிய நால்வகைநெறிகளையும் மேற்கொண்டு முடிவில் இறையடிநீழலில் இயைந்து பேரின்பெய்துவர் என்பது உண்மை யாதலின் அம்முறையில் சரியையிற்றலைப்படக்கிடைக்கப்பெற்றூர் அந்நெறிநின்று இறைவன்திருவடியையே பற்றுக்கோடாக உணர்ந்து வழிபாடுசெய்யும் இயல்பினராவர் என்பது தோன்ற "அவையேயுணர்வுற்றவர்" என்றூர். 'பாசப்பிணிப்பாற் பிறப்

* பதினோராந்திருமுறை-திருக்கண்ணப்பதேவர் திருமறம் அடி 111-112.
† சிவஞானசித்தி. சூ.—8. செ. 11.

பிறப்புக்களிற்பட்டு நெடுங்காலம்வருந்துவோர் அத்துன்ப ஒழிவுக்குரிய சாதனத்தையே முதலில் நாடுதல் இயல்பாதலின், மிருகண்டு புதல்வர்பொருட்டுக் கூற்றுதைத்தசெய்தியைக் குறிப்பிடுவாராயினர். இத்துணையும் சரியைவழியொழுகுவோர் என்பது பெறப்பட்டமையான் மேல் 'உம்பர் உம்பர்' என்பன கிரியையாளரையும், யோக நிலையினரையும் உணர்த்துவனவாம். உம்பர்-மேல்நிலை; ஆகுபெயராய் அந்நிலையில் ஒழுகுவோரைக் குறிக்கும். பின்னதற்கும் இஃதொக்கும். சரியையாளர்க்குமேற்பட்ட கிரியையாளரும் அவர்க்கு மேற்பட்ட யோகநிலையினரும் என்றபடி. ஈண்டு எண்ணும்மைகள் செய்யுள்விகாரத்தால் தொக்கன. ஆகவே சரியை கிரியை யோகம் என்னும் மூன்றுநெறிகளினும் ஒழுகுவோர், முறையே சாலோகம் சாமீபம் சாரூபம் என்னும் பதமுத்திகளைப் பெறுவாராதலின் அன்னார்க்கு அப்பதங்களைய்ருளும் இறைவனைக் குறித்து "உணர்வுற்றவர் உம்பரும்பர் பெறும்பதமே" என்றார். இன்பத்தை வழங்கும் இறைவனை வேற்றுமையின்மைபற்றி "இன்பமே" என்று விளித்தமைபோலப் பதமுத்தியருளும் நிலையில் இறைவனைப் "பதமே" என்று விளிகொள்ளலானார்.

அடியார் என்றது ஈண்டு மெய்யன்பராகிய சிவஞானச் செல்வரை. அவர்கள் ஞானநெறியின் ஒழுகுவோராதலின் அன்னார் பெறும் பேறு முடிவாகிய சாயுச்சியமுத்திநிலையாகும். "மூன் மார்க்க ஞானத்தா லெய்து முத்தி முடிவென்பர் மூன்றினுக்கு முத்திபதம் என்பர்"* என்பது ஞானநூல். சாலோகமுதலிய பதமுத்திகளைப் பெற்றார்க்கு அந்நிலையிற் பெயர்ச்சியுண்டு. சாயுச்சிய நிலையினர்க்குப் பெயர்ச்சியில்லாமையால் 'அடியார் பெயராத பெருமையனே' என்றார். "பெயராத" என்னும் எதிர்மறைப்பெயரெச்சம் பெருமையன் என்னும் காரணப்பெயர்கொண்டுமுடிந்தது. "ஏதுப்பொருள் கருவிக்கணடங்கும்" என்பர் சேனாவரையர்.† மெய்யடியாராகிய சிவஞானச்செல்வர் எய்தும் சாயுச்சியநிலை மீண்டு பெயராதநிலையாகும். இதனையே பிறிதோரிடத்து அடிகள் "மறிவறியாச்செல்வம்" என்பர். சாயுச்சியமாகிய பரமுத்தியெய்தியவுயிர் மீண்டு பிறவாமைக்கு ஏதுவாகவுள்ள பெருமை சிவபெருமான்கண்ணதாகலின் "பெயராதபெருமையனே" என்றார்.

---

* சிவஞானசித்தி. சூ–8. செ. 18. † தொல். சொல். சூ.–234 உரை.

பெருமை-ஞானநெறியொழுகித் தன்னையடைந்தவுயிரை மீண்டு பிறவியிற் செலுத்தாமல் அழிவிலின்பந்துய்க்கத் தன்னை வழங்குத லாகிய செயற்கருஞ்செயல்.

இவ்வாறு இறைவனைவிளித்துப் புலன்களால் தமக்கு ஏற் பட்ட துன்பத்தை ஒருவமையில்வைத்து அடிகள் புலப்படுத்து கின்றார். நாங்கூழ் - ஈரமுள்ளமண்ணில் தோன்றும் ஒருவகைப் புழு. இதனை நாக்குப்பூச்சி எனவும் நாகப்பூச்சி யெனவும் கூறுவர். இப்புழு எறும்பினும் எத்தனையோ மடங்கு உருவத்தாற் பெரிய தாகும். இதனைப் பல எறும்புகள் கூடிச் சல்லடைக் கண்களாக அரித்து ஈர்த்துச் செல்லுதலைக் கண்கூடாகக் காணலாம். நாங்கூழ் உருவத்தால் பெரிதாகஇருந்தும், சிற்றெறும்புகளை அடக்கும் ஆற்றலின்றி அவற்றால் துன்புறுதல்போல யான் பருத்த வுருவ முடையனாக இருந்தும் நுண்ணியநிலையில் என்னுட் புகுந்து என்னையரித்து வருத்தும் புலன்களைக் கடக்கும் ஆற்றலின்றி வருந்துகின்றேன் என்பார் "எறும்பிடை நாங்கூழெனப் புலனாலரிப் புண்டலந்த" என்றார். பூச்சிதின்னுதலை அரித்தல் என்ப. "காழ் சோர் முதுசுவர்க் கணச்சித லரித்த"* என்புழிக் காண்க. ஒரு பொருள் எவ்வாற்றானுவது பயன்படும்நிலையிலுள்ளதாயின் அதற்குக் கேடுநேர்ந்துழி அப்பயன்கருதி அக்கேட்டையொழிக்க ஒருவர் முற்படுதல் உலகியலிற் காணப்படுவது. நாங்கூழ் பயன் படாமையால் எறும்பரிக்கக் காண்பார் விளையாட்டுக் காட்சியாகக் காண்பதல்லது துணைசெய்யமுற்படாமைபோலப் புலன்களால் அரிப்புண்டு துன்புறும் யான் யார்க்கும் பயன்படாமையால். இத் துன்பத்தினின்றும் விலக்கித் துணைபுரிவார் யாரையும் இலனாயி னேன் என்பார் "வெறுந்தமியேனை" என்றார். வெறுமை-பயனின் மை. தமியேன் - துணையில்லாது தனிப்பட்டவன். உலகியற் றுணைசிறிதுமின்றித் தனிப்பட்டவனாகிய சிறியேற்குத் தோன் றாத்துணையாகவுள்ளவன் நீயேயாதலின் இந்நிலையில் என்னைக் கைவிடுதல் தகுமா என்பார் "விடுதிகண்டாய்" என்றார்.

இதன்கண் உலகியற்பொருள்பற்றிய புலன்களாலாம் துன் பம் பொறுக்கலாற்றாதது என்று கூறப்பட்டிருத்தலின் பிரபஞ்ச வைராக்கியம் புலனாதல் அறிக.

---

* சிறுபாண். அடி. 133.

போதும்புறு தீப்போற் புகைந்தெரி யப்புலன் றீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதிகண் டாய்விரை யார்நறவந்
ததும்புமந் தாரத்திற் றரம் பயின்றுமந் தம்முரல்வண்
டதும்புங் கொழுந்தே னவிர்சடை வானத் தடலரைசே.

கருத்துரை:—முன்னைத் திருப்பாட்டில் என் மனம் அஞ்சி ஒடுங்குமாறு பிறப்பாகிய ஐந்தலைப்பாம்பு பொருதலால் நின் திருக்குறிப்பின் வழியொழுக இயலாதாயிற்று என்று இறைவனை நோக்கிக் குறிப்பிட்ட அடிகள் இத்திருப்பாட்டில் அவ்வைவாயரவத்தாலாம் புலத்தீத்துன்பத்திற்குத் தம் ஆற்றாமையை மீண்டும் விளக்கிக்கூறுகின்றார்.

பதவுரை:—விரை ஆர் நறவம் ததும்பும் மந்தாரத்தில் - நறுமணம்பொருந்திய தேன் நிறைந்த மந்தாரமலரில், தாரம் பயின்று மந்தம் முரல் வண்டு - எடுத்தலிசைபாடிப் பின் படுத்தலிசையொலிக்கும் வண்டுகள், அதும்பும் கொழும் தேன் அவிர் சடை - அமிழ்தற்கு ஏதுவாகிய செழித்த தேன்விளங்கும் சடையினையுடைய, வானத்து அடல் அரைசே - சிதாகாயத்தில் வீற்றிருக்கும் வெற்றிமிக்க வேந்தர்பெருமானே, பொதும்பு உறு தீப்போல் புகைந்து எரி - மரப்பொந்திற் பொருந்திய நெருப்பைப்போலப் புகைந்து எரிகின்ற, அப்புலன் தீக் கதுவ வெதும்புறுவேனை - அப்புலன்களாகிய நெருப்புப்பற்ற அதனால் வெதும்புதலையுடைய சிறியேனை, விடுதி - விட்டு விடுவாயோ? (விடலாகாது) என்பது.

விளக்கவுரை.—மந்தாரம் என்பது கற்பகம் முதலிய தேவதருக்கள் ஐந்தனுள் ஒன்று; அஃது ஆகுபெயராய்நின்று மலரையுணர்த்திற்று. அம் மலர் இறைவன்சடையில்விளங்கும்நிலையை அடிகள் அகக்கண்ணாற்கண்டு தம் நெஞ்சக்கிழியில் ஓவியமாகத் தீட்டிக்கொண்டு பாடல்வடிவில் நம்மனோரையும் நினைவுகூர அருளிச் செய்கின்றார். மலர்களில் உள்ளவை நாற்றமும் தோற்றமும் நறவமும் ஆம். ஈண்டு விரையார் என்றனால் நாற்றமும், மந்தாரம் என்றதனால் ஆகுபெயராற் கொள்ளப்பட்ட மலரின்தோற்றமும், நறவந்ததும்பும் என்றதனால் நறவமும் கூறியபடியாம். மலரின் வண்ணமும் வடிவும் தோற்றத்தின்பாற்படும். இத்தகைய தெய்விகப் பூவாகிய மந்தாரமலரை இறைவன் சடையில் அணிந்திருக்குங்கால் அதன்கண் உள்ள தேன்பெருக்கில் இசைபாடிச் சாரும்

வண்டுகளின் அரிய செயல்களை அடிகள் அழகுபொருந்தப் புனைந்துகூறுகின்றார். ஆண்டு வண்டுபாடிய இசை மந்தோச்சசமம் என்னும் மூன்றனுள் உச்சமும் மந்தமுமாம். தாரத்தை உச்சசுரமெனவும் எடுத்தலிசையெனவும், மந்தத்தைப் படுத்தலிசையெனவும் இசைநூலார் கூறுவர். இங்கே வண்டுகள் மந்தாரமலரையடுத்ததும் புறத்தே சூழ்ந்து எடுத்தலிசைபாடிப் பின் அகத்தே யணுக வணுகப் படுத்தலிசைபாடின வென்பதும், ஆங்குச் செழித்துப் பெருகிய தேனிற்றோய்ந்ததும் இசைபாடுதலை ஒழிந்து அத்தேனை யுண்டு களித்து மவுனநிலையடைந்தனவென்பதும் புலப்பட "மந்தாரத்திற் றாரம்பயின்று மந்தம்முரல் வண்டு அதும்புங் கொழுந்தேன்" என்றார். ஈண்டுப் பயிலுதல் பழகுதல் என்னும் பொருளுடையதாகலின் அஃது உரத்தகுரலில் அடுத்தடுத்துப் பாடுதலையும், முரலுதல் அதனிற் றாழ மெல்லிதாக ஒலித்தலையும் குறிப்பனவாம். அதும்புதல்-அமிழ்தல். தேன்பெருக்கில் அமிழ்ந்ததும் ஒலித்தலின்றென்பது போதரும். "அதும்பும் கொழுந்தேன்" என்புழி அதும்பும் என்பது செய்யும் என்னும் வாய்பாட்டுப்பெயரெச்சமாகும்; காரியப்பொருளில்வந்தது. இவ் வருணனையில் இதனை உவமையாகக்கொண்டு அறியதக்க பிறிதொருபொருளும், குறிப்பில்வைத்து உணரத்தக்க சிறந்த சைவசித்தாந்த நுண்பொருளும் அமைந்திருத்தல் அறிந்துணர்ந்து இன்புறத்தக்கன, அவை முறையே வருமாறு:—மலரினுள்ள தேனையுண்ணவந்த வண்டு அதனையுண்ணுமல் புறத்தே சுற்றுங்கால் ஒலிசெய்தும் அகத்தே படிந்துண்டதும் ஒலியடங்கப்பெற்றும் இருத்தல் இயல்பு. இக்குறிப்பு, கற்றறிந்த பெரியோன் ஒருவன் இறைவனையணுகப் பெறுதநிலையில் தருக்கவாதமுதலியனசெய்வன் என்பதையும் இறையருளில்படிந்ததும் அவ்வாதம் ஒழிந்து மவுனநிலையடைவான் என்பதையும் புலப்படுத்தும் என்ப. இக்கருத்தை,

"வண்டு மலர்ப்புறத்தே மன்மதுவுண் ணுதோலிக்கும்
உண்டுண் மகிழ வோலியடங்கும் - அண்டான்
தருக்கவா தம்பகர்வான் சார்மனத்தை யீசற்
கோருக்கமகிழ் வான்மவுன முற்று"

என்னும் வெண்பாவால் அறியலாம். இரண்டாவதாகக்கூறப்பட்ட சைவசித்தாந்தநுண்பொருள் வருமாறு:— மந்தாரமலரினுள்ள

வண்ணம் சத்தையும், நறுமணம் சித்தையும், தேன் ஆனந்தத்தை யும் குறிப்பின் உணர்த்த இம் மூன்றனையும் உடைய அம்மலர் சச்சிதானந்தன் என்னும் உண்மையறிவின்பவடிவினனாகிய இறைவனையும், தேனுண்ணவந்த வண்டு அவ்விறைவனை யடைதற்குரிய பக்குவான்மாவாகிய உயிரையும் குறிப்பனவாம். உயிர்க்குப் பக்குவமுதிர்தற்குமுன் பாசஞான பசுஞானங்களாகிய அபரஞானமும் பக்குவமுதிர்ந்தபின் பதிஞானமாகிய அநுபவவுணர்வும் உண்டாம் என்ப. இக்குறிப்பை வண்டு தாரம் பயின்று மந்தம் முரன்று கொழுந்தேனில் அமிழ்தலாகிய நிகழ்ச்சிகள் புலப்படுப்பனவாம். எடுத்தலிசை பாசஞானத்தையும், படுத்தலிசை பசுஞானத்தையும், கொழுந்தேன் சிவானந்தத்தையும், வண்டு அவ்விசையொழிந்து தேன்பெருக்கில் அமிழ்தல் பக்குவான்மா பாச பசு ஞானங்களைவிட்டுச் சிவாநந்தத்தில் தோய்ந்து இன்புறுதலையும் குறிப்பனவாம். "பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே நேசமொடு முள்ளத்தே நாடி"* என்றபடி பாச பசு ஞானங்களாகிய அபரஞானத்தால் அறியப்படாத இறைவனைப் பதிஞானமாகிய பரஞானத்தால் உணர்ந்து சிவானந்தத்தழுந்தி யின்புறலே வீட்டுநிலையென்ப. இரண்டற்ற நிலையாகிய வீட்டின்பநுகர்ச்சிக்குத் தேனிற்படிந்த வண்டினையே சைவநூல் எடுத்துக்காட்டுமென்பதையும் ஈண்டு நினைவுறல் வேண்டும். இத்துணையும் இறைவன்சடையில்விளங்கும் மந்தார மலரைக்கொண்டு அடிகள் சிற்றறிவினேமாகிய நம்மனோர் உய்தற் பொருட்டுக் குறிப்பிற்புலப்படுத்த உண்மைகளாகும். வானம் - ஞானப்பரவெளி. அதன்கண் விளங்கும் இறைவனை வெற்றி வேந்தன் என்னும் பொருடோன்ற "அடலரைசு" என்றார், "வானவூர் கொள்வோநாம் மாயப்படைவாராமே" என்றபடி மாயப்படைகளை வென்று அருளாட்சிபுரிதல்பற்றி யெனக.

இனி, மதுப்பெருக்கில் மூழ்கியின்புறும் வண்டுபோலச் சிவானந்தத்தில்திளைத்து இன்புறும் வேட்கைமிக்க சிறியேனை அப்பேறெய்தாவண்ணம் தடைப்படுத்துப் பிறவியாகிய ஐவாயரவம்

* சிவஞானசித்தி. 9 - 1.

புலன்களாகிய நச்சுத்தீயால் வெதுப்புகின்றதேயென அடிகள் முறையிட்டு ஆறுதல்வேண்டுகின்றார்.

பொதும்பு - மரப்பொந்து. இதனைக் காட்டிலுள்ளதென்று கொள்ளல்வேண்டும். ஒருமரத்தின்பொந்திற்பட்ட தீ புகைந்து சிறிதுசிறிதாகப்பெருகி முடிவில் அப்பொந்திருந்த மரத்தையும் எரித்தல்போல உடம்பின் பொறிவாயிலிற்பற்றிய புலனாகிய நெருப்புச் சிறிதுசிறிதாகப்பெருகி உடம்பொடு வேற்றுமையற்றுநிற்கும் என் உயிரையும் சுடுகின்றதென்பார் "பொதும்புறு தீப்போற் புகைந்தெரியப் புலன்தீக்கதுவ வெதும்புறுவேனை" என்றார். ஒரு வீட்டிற்பற்றியதீயானால் அதனையணைக்கப் பலர் விரைந்துமுற்படுவாராதலின் அதனை விலக்கற்குக் காட்டிலுள்ள மரப்பொந்திற் பற்றிய தீயை உவமையாக்கினர். வீட்டருகிலுள்ள மரப்பொந்து என்று கொள்ளலாகாதோ எனின் அது பொந்துபடின் அதன்கண் தீங்குசெய்யும் நச்சுயிர்கள் வாழும் எனக் கருதிப் பொந்துபடுங்காறும் அதனை வீட்டிலுள்ளார் வைத்திருக்கமாட்டார் ஆதலின் ஆகாதென்க. காட்டிலுள்ள மரப்பொந்திற் பற்றிய தீ மழையானன்றித் தணியாமைபோல என்னைப்பற்றிச் சுடும் இப்புலனாகிய தீயை யணைத்தற்கு ஆண்டவனே! நின் அருண்மழையல்லது வேறுகருவி காண்டலருமையாதலின் நீயே முற்பட்டு உதவிபுரிதல்வேண்டுமென்று அடிகள் குறிப்பிற் புலப்படுத்தவாறும். "அப்புலன்" என்புழிச் சுட்டு முன்னைத் திருப்பாட்டுக்களிற் கூறப்பட்டபடி பற்பல துன்பங்களை விளைத்ததென்பதைச் சுட்டிநின்றது. இறைவ! நின்னாலன்றித் தணிக்கஇயலாத புலனாகிய நெருப்பினாற் சுடப்பட்டுவருந்தும் இந்நிலையில் என்னைக் கைவிடல் தகுமா வென்பார் "விடுதிகண்டாய்" என்றார்.

இதன்கண், "பொதும்புறு தீப்போற் புகைந்தெரியப் புலன் தீக்கதுவ வெதும்புறுவேனை" என்றதனால் உலகவாழ்க்கை புலன்களின்கொடுமையால் துன்புறத்தக்கதென்பது பெறப்படுதலின் பிரபஞ்சவைராக்கியம் புலனாதலறிக.

உ

நாலடியார்—இருவருரைத்திருத்தம்

[திரு. சத்தியவாகீசுவரையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், திருவநந்தபுரம்]

[கசசு-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

அதிகாரம்—பெரியாரைப்பிழையாமை. பாட்டு—7.

5 மன்னர் திருவும் மகளி ரெழினலமும்
துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா—துன்னிக்
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மர மெல்லாம்
உழைதங்கட் சென்றார்க் கொருங்கு.

இதன்பொருள்:—மன்னர் திருவும் - அரசருடையசெல்வத்தையும், மகளிர் எழில்நலமும் - பெண்களின் இளமைநலத்தையும், துன்னியார் - அவர்களையடுத்திருப்பவர், துய்ப்பர் - அநுபவிப்பார்கள், தகல்வேண்டா - அநுபவிப்பவருக்கு வேறு தகுதி வேண்டுவதில்லை, (எதுபோலவெனின்) துன்னிக் குழைகொண்டு - நெருங்கி இலைக்கொத்துக்களையுடையனவாய், தாழ்ந்த - கவிந்துள்ள, குளிர்மரமெல்லாம் - குளிர்ச்சியையுடைய எல்லாமரங்களும், தங்கண் சென்றார்க்கு - தம்மிடம் வந்தவர்க்கு, ஒருங்கு உழை - ஒப்ப இடமாகும் என்றவாறு.

மன்னர்திருவையடைதற்குத் தகுதியாவன:—கல்வியறிவு, அஞ்சாமை, தோற்றப்பொலிவு, ஆள்வினைத்திறம் முதலியன. மகளிரெழினலத்தையநுபவிக்கத் தகுதிகளாவன:—ஒத்தகுலம், தோற்றப்பொலிவு, கல்வி, செல்வம் முதலியன. இத்தகுதிகளிருப்பினும் மரத்தின்நிழலாற் பயன்கோடற்கு அங்குச்செல்லுதல் இன்றியமையாததுபோல, மன்னர்திருவையும் மகளிரிளமைநலத்தையும் அநுபவித்தற்கு அவரையடுத்திருப்பது இன்றியமையாதது என்பது பாட்டின்கருத்து.

எழினலம்—எழுச்சியும் அழகுமுடைமையின் இளமைக்கு அது பெயராயிற்று. 'தகல்வேண்டா' என்றது வேண்டப்படும் தகுதிகளுள்வைத்து அடுத்திருத்தல் இன்றியமையாதது என்பது

விளக்கற்கு. மரத்தின்நிழல் உவமை; அரசர்திருவும் மகளிரெழி னலமும் உபமேயங்கள். துன்னுதல் பொதுத்தன்மை.

இருவருரைகாரர், 'எல்லார்க்கும் எளிதில் தவறாமல் பயன் கொடுத்துதவுகின்ற அரசர்களது சிறப்பு இதனாற் கூறப்பட்டது' என்றும், 'படவே ஆற்றலாற் பெரியாராய அவர்களைப் பிழையாமல் பலரும் பயன்பெறவேண்டும் என்பது கருத்து' என்றும் கூறினர். பாட்டின்பொருளுக்கும் அவர்கூறிய கருத்துக்கும் இயைபின்மை எளிதில் அறியக்கிடக்கின்றது. அன்றியும், மகளிர் என்பதற்குப் பொதுமகளிர் எனப்பொருள்கொண்டு சிறிதும் பொருத்தமில்லாத உரையொன்றும் பிறர்கூற்றாகக்கொண்டுகூறினர்.

அதிகாரம்—அறிவின்மை. பாட்டு. 6.

6 கற்றறிந்த நாவினர் சொல்லார்தஞ் சோர்வஞ்சி
மற்றைய ராவார் பகர்வர் பனையின்மேல்
வற்றிய வோலை கலகலக்கு மெஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை யொலி.

இ—ள். கற்று அறிந்த நாவினர் — நூல்களைப்படித்துப் பொருள்களையறிந்த பெரியோர், தம் சோர்வு அஞ்சி—தமக்குநேரக் கூடிய தவறுகளுக்குப் பயந்து, சொல்லார்—பேசமுற்படார், மற் றையராவார்—கல்லாதவர், பகர்வர்—சிறிது இடம் கிடைப்பினும் பேசிக்கொண்டேயிருப்பர், (எவைபோல் எனின்?) பனையின்மேல்— பனைமரத்தின்மேலுள்ள, வற்றிய ஓலை—உலர்ந்த ஓலைகள், கலகலக் கும்-(சிறிது காற்றுவீசினும்) கலகலவென்று ஒலித்துக்கொண்டே யிருக்கும், (ஆனால்) எஞ்ஞான்றும்—எப்பொழுதும், பச்சோலைக்கு— பசுமையான ஓலைகளுக்கு, ஒலி இல்லை—ஒலித்தற்குணம் இன்றாம் என்றவாறு.

சிறிதும் காற்றில்லாதபொழுது வற்றியஓலையும் கலகலக்காது, வற்றியஓலை கலகலத்தற்குவேண்டும் காற்று உள்ளபொழுதெல்லாம் பச்சோலையும் ஒலிக்காது, ஆதலின் எஞ்ஞான்றும் பச்சோலைக்கில்லை யொலி என்றார்.

சிறிது இடம் கிடைப்பினும் கல்லாதவர் இயைபுள்ளதும் இல்லதுமாகப் பேசிக்கொண்டேயிருப்பர். ஆனால், கற்றறிந்த பெரியோர் சமயம்நேர்ந்தாலும் அவையில் பொட்டெனப் பேசமுற்படார் என்பது கருத்து.

கற்றறிந்தார்க்கு அச்சமாவது தாம்சொல்லும் சொல்லின் கண்ணும் பொருளின்கண்ணும் தவறுவந்துவிடுமோ என்பது பற்றியது. கற்றறிந்தநெஞ்சினர் என்னாது நாவினர் என்றது அவர் சொல்வன்மையுடையர் என்பது தோன்றற்கும் பிறர்நாப்போல் அறுசுவைகளையும் அறிவதிலும் வம்பளப்பதிலுமே பயின்றதன்று என்றற்குமாக. பாஷையில் இது செவ்விது, இது தவறு என்னும் பகுத்தறிவின்மையால் கல்லாதவர் பேசுவதில் தடையுறார்; அதனால் மற்றையராவார்பகர்வர் என்றார். சோர்வு என்பதற்கு ஈண்டு மறதி, தோல்வி என்று பொருள்கொள்ளினும் இழுக்காது.

இனி, எஞ்ஞான்றும் என்பது வேதகிரிமுதலியாருரையில் பச்சோலையுடன் கூட்டப்பட்டது. அவ்வுரையைப் படித்துப்பார்த்தவராக இருக்கவேண்டுமென்று கருதப்படுகிற இருவருரைகாரர் அதனை வற்றியவோலையுடன்கூட்டி அது எப்பொழுதும் கலகலக்குமென்றார். அது எப்பொழுதும் கலகலவாமை காட்டப்பட்டது.

அன்றியும், கற்றறிந்தநாவினர் என்பதற்கு நன்றாக இலக்கணம்படித்தவர் என்றும், மற்றையர் என்பதற்கு அஃதறியாதவர் என்றும் இப்பாட்டியற்றியவர் பொருள் கருதியிருப்பர் என்பது அறிந்தநாவினர் என்ற சொல்லாலும் பிறகுறிப்பாலும் உலக அனுபவத்தாலும் தோன்றுகிறது. விரிப்பிற் பெருகும்.

அதி—இளமைநிலையாமை. பாட்டு. 5.

7 எனக்குத்தா யாகியா ளென்னையீங் கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றாள்—தனக்குத்தா
யாகி யவளு மதுவானாற் றாய்த்தாய்க்கொண்
டேகு மளித்திவ் வுலகு.

இ—ள். எனக்குத் தாயாகியாள்—எனக்குத் தாயாயிருந்தவள், என்னை ஈங்கு இட்டு—என்னை இங்கே போகட்டு, தனக்குத் தாய்நாடிச் சென்றாள்—தனக்கொரு தாயைத் தேடிக்கொண்டு போனாள், தனக்குத் தாயாகியவளும் அது—அவளுக்குத் தாயாயிருந்தவளும் அப்படியே, ஆனால்—அவ்வாறாயின், இவ்வுலகு—இந்தவுலகத்துயிர்வர்க்கம், தாய்த்தாய்க்கொண்டு ஏகும் அளித்து—(உயிர்வாழ்விறுதியில் வழிவழியாகத் தமக்குத்) தாய்மார்களைத் தேடிக்கொண்டு செல்லுதலாகிய இரங்கத்தக்கதன்மையையுடையது என்றவாறு.

ஏ அசை. தாயாகியவளும் என்பதனுள் உம்மை எச்சவும்மை. ஆனால் பிரிநிலையிடைச்சொல்.

ஆனால்—ஆதலால் என்றார் இருவர். இங்கே காரணப்பொருளில்லாமையால் அது பொருந்துவதன்று. தனக்குத் தாய்நாடிச் சென்றாள் என்பது இறந்து மற்றொருத்திவயிற்றிற் புகுந்தாள் என்றபடி. தாய்த் தாய்க்கொண்டு என்பதற்குத் தாயைத்தேடிக்கொண்டே என்று பொருளும், தாய்—தாவு என்பதனடியாகப் பிறந்த வினையெச்சம் என்று இலக்கணமும் கூறினர். தேடு என்ற பொருளுக்குத் தாவு என்பது பிரதிபதமாகாமை அறிந்திலர் போலும்.

இப்பாட்டில் எடுத்துக்கொண்டபொருள் இறந்தவுயிர் தாய் நாடிச்செல்லும் என்பது. முதல்வாக்கியத்தால் அதனைச் சிறப்புவகையாற் சொல்லிப் பின்வாக்கியத்தில் பொதுவகையாற் சொல்லிமுடிக்கிறார். சிறப்புவாக்கியத்திற் சொன்னதுபோலப் பொதுவாக்கியத்திலும் வரத் தாய்த்தாய்க்கொண்டு என இருமுறை சொல்லியிருக்க அந்தமுறைக்கிடப்பினையறியாராய் இரண்டிலொன்றை வினைச்சொல்லாக்கினர் இருவர். நாடி என்பது பின்னுங்கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது. ஈங்கு—இவ்வுலகில். இவ்வுலகு—காணப்படுகிற வுலகம்.

அதி—நல்லினஞ்சேர்தல். பாட்டு. 7.

8 பாலோ டளாயநீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்திரிந்து தோன்றதாம்—தேரின்
சிறியார் சிறுமையுந் தோன்றதாம் நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.

இ—ள். பாலோடு அளாய நீர்—பாலுடன் கலந்த தண்ணீர், பாலாகுமல்லது — பாலாகவிளங்குமேயல்லாமல், நிறம் திரிந்து நீராய்த்தோன்றது—தான் கலந்த பாலின் நிறத்தினின்றும் மாறித் தண்ணீராய்த்தோன்றது (அதுபோல), தேரின்—ஆராயின், நல்ல—நல்லியல்பையுடைய, பெரியார் பெருமையைச் சார்ந்து—பெரியோரது பெருந்தன்மையில் தாம் தொடர்புகொள்ளுதலால், சிறியார் சிறுமையும்—செல்வத்திற்சிறியவாது சிறியதோற்றமும், தோன்றது—புலப்படாமல் மறையும் என்றவாறு.

பெரியாராவார் — கல்விகேள்விகளால் உயர்ந்தவர். அவர் பெருமையாவது பொருளில் வறுமையுற்றுக் கல்விகேள்வியுடையராய்த் தம்மைச் சார்ந்தவரை உயர்த்தக்கருதும் பெருந்தன்மை. பெருமையைச்சார்தலாவது—பெரியாரையடுத்து, அவரில் ஓரங்கமாதல். சிறியார்—கல்விகேள்வியுடையாராயினும் செல்வங்குறைந்தவர். அவர் சிறுமையாவது வறுமைகாரணமாகப் பொலிவிழந்த தோற்றமும் பிறரால் அவமதிக்கப்படுதலும்.

நிறந் தெரிந்து தோன்றது என்ற பாடத்திற்குத் தெரிதல் காண்பாரதுவினையும் தோன்றுதல் பாலின்வினையுமாய் முடிபு இயையாது. எச்சத்தைத் திரித்துமுடித்தல்வேண்டும். ஆனல், நிறந்திரிந்து என்ற பாடத்திற்கு அது வேண்டுவதின்று. அல்லாமலும் பொருட்சிறப்பு இதற்கே இருக்கிறது.

இனி இருவருரைகாரர் நீராய்த் தன்னிறம் விளங்கிக்காணப் படாது என்றார். நீருக்குத் தன்னிறம் என்று ஒருநிறமின்மையின் அது பொருந்தாது. "நிலத்தியல்பால் நீர்திரிந்தற்று" என்றார் திருவள்ளுவர். சிறியார்சிறுமை என்பதற்கும் அற்பர்களது

கீழ்க்குணம் என்றுரைத்தார் இருவருரைகாரர். கீழ்மைக்குண முடைய அற்பர்கள் தம்மைச்சாரப் பெரியோர் இடங்கொடார். அதனால் பெரியாரைச்சார்தலும் அவர்சார்பால் தம்நிலை தோன்றா மற்போதலும் ஆகிய இவை கீழ்மையுடையார்க்குக் கிட்டுவனவல்ல. அதனால் இது இடமறியாமல் மயங்கிக்கூறியதாம். அன்றியும், உபமானத்தையும் பொதுத்தன்மையையும் கவனிக்கவேண்டும். பாலைநோக்கத் தண்ணீர் ஒருவகையில் மதிப்புக்குறைந்ததாயினும் அதற்கும் தனிப்பெருமையுண்டு. ஆகவே இரண்டும் உயர்ந்த பொருள்களே. தாம் கருதிய பொருளை உபமானத்தால் விளங்க வைத்திருக்கிறார் புலவர். பாலிற்கலந்து தன்தன்மையிழந்து பால் மயமாகும் நீர்போலப் பெரியாரைச்சார்ந்து தம் நிலைமை மாறிப் பெரியாதற்குரியவரைக் கீழ்மைக்குணமுடைய அற்பர் என்றல் பொருந்தாமை அறிக.

சார்ந்து என்பது சார எனச் செயவெனெச்சமாக்கப்பட்டது.

அதிகாரம்—நயமை. பாட்டு—3.

9 கணமலை நன்னாட கண்ணின் றொருவர்
குணனேயுங் கூறற் கரிதாற்—குணனழுங்கக்
குற்ற முழைநின்று கூறுஞ் சிறியவர்கட்
கெற்றா லியன்றதோ நா.

இ—ள். கணம் மலை நல் நாட - கூட்டமான மலைகளையுடைய நல்லநாட்டிற்குத் தலைவனே! கண்நின்று - எதிரேநின்று, ஒருவர் குணனேயும் - ஒருவருடைய குணமும், கூறற்கு அரிது - எடுத்துச் சொல்லப்படுதற்கு முடியாததாயிருக்கிறது, (அங்ஙனமிருக்க) குணன் அழுங்க - குணங்கள் கெடும்படி, குற்றம் - ஒருவருடைய குற்றங்களை, உழைநின்று - அவர்புறத்தில்நின்று, கூறும் - சொல்லு கிற, சிறியவர்கட்கு - கயவர்க்கு (மூடர்க்கு) நா எற்றால் இயன்றது? நாக்கு எந்தப்பொருளால் செய்யப்பட்டது? (கல்லினாற் செய்யப் பட்டதா? இரும்பினாற் செய்யப்பட்டதா?) என்றவாறு.

ஆலும் ஓவும் அசைநிலைகள்.

ஒருவரெதிரேநின்று அவர்குணத்தை எடுத்துச்சொல்வதும் முடியாததாயிருக்கப் புறத்தில்நின்று அவரது குற்றங்களைக்கூறு வார் மிக இழிந்தவர் என்பது கருத்து.

கண்நின்று என்பதற்கு, 'கண்ணின்றுகண்ணற' என்னும் 184-ஆம் குறளில் பரிமேலழகர்கூறிய உரையைப் பின்பற்றிப் பொருள் கொள்ளப்பட்டது. குணங்கூறுதற்கண் 'எதிரேநின்று' என முன் வந்தமையால் குற்றங்கூறுதற்கண் 'உழைநின்று' என்பதற்குப் புறத்தில்நின்று எனப் பொருள்கொள்ளுதல் நேர்மையாம். குணன்-குணம். எற்று?—எவ்வியல்புடையது?

குணமும் கூறுதற்கரிதாவது எவ்வாறு?—குணங்கூறலாவது புகழ்ந்துசொல்லுதலன்றோ? ஒருவரை அவரெதிரேநின்று புகழ்ந்துசொல்லுங்கால் அதனைக்கேட்பவர் "தன்புகழ்கேட்டான் போல் தலைசாய்த்து" (கலித்தொகை) என்றபடி நாணத்தால் தலை குனியும்படிசெய்கின்றது அப்புகழ்ச்சி; அதனால், ஒருவர்முன்நின்று அவர்குணங்களை எடுத்துச்சொல்வதும் மெல்லியநெஞ்சுடையார்க்கு எளிதாயிருத்தலின்றி அரியதொன்றாகவேயிருக்கும்.

கூறற்கரிதாந்தன்மை குற்றங்கூறுதற்கணல்லாமல் குணங் கூறுதலினும்உண்டு என்றலின் 'குணனேயும்' என்பதில் உம்மை எச்சப்பொருளில்வந்தது.

இனி இருவருரைகாரர், 'புறத்திலிருந்து பிறரொருவரது நற்குணத்தையும் எடுத்துச்சொல்லுவதற்கு நாவெழுதல் அருமை யாயிருக்கும்' என்றும், 'ஒருவரது நற்குணத்தைப் புறத்திற்கூறுவது சாதாரணமாயினும் அவர் யாது நினைப்பரோ என்று அஞ்சவேண்டி யிருக்க' என்றும் உரைகூறினர். இது நம் அநுபவத்தில் இதுவரை வாராத புதுப்பொருளாகும். இதன் பொருத்தமின்மையை அறிஞர் அறிந்துகொள்வர் என்பதுபற்றியும் விரிவஞ்சியும் இவ் வளவில் நிறுத்தலாயிற்று.

அதிகாரம்—காமநுதலியல். பாட்டு—3.

10 கம்மஞ்செய் மாக்கள் கருவி யொடுக்கிய
மம்மர்கொள் மாலை மலராய்ந்து பூத்தொடுப்பாள்
கைம்மாலை யிட்டுக் கலுழ்ந்தாள் துணையில்லார்க்
கிம்மாலை யென்செய்வ தென்று.

இது தலைவனைப்பிரிந்தவள் மாலைநேரங்கண்டு இரங்கல் என்னும் துறை.

கம்மாளர் தம் தொழிற்கருவிகளை யொடுக்க மயங்கிவருகின்ற மாலைப்பொழுதின்கண் அணிந்துகொள்ளற்கு மலர்களை ஆராய்ந்து தொடுப்பவளாகிய பெண்ணொருத்தி 'துணைவரையில்லாதார்க்கு இதோவருகின்ற மாலைப்பொழுதிற்கு என்னபயன்படுவது இது' என்று நினைத்துத் தன்கையிலிருக்கின்ற மலர்மாலையைக் கீழே யெறிந்து மனக்கலக்கங்கொண்டாள் என்பது இதன் பொழிப்பு.

கணவன் கெருநற் பிரிந்தானென்று கொள்ளலாம். மாலை நேரம் வரும்வரை வீட்டுவேலையிற் கவனமாயிருந்தவள் கணவனுடன் கூடியிருந்தகாலத்திற் செய்துபோந்த வழக்கப்படி பூத்தொடுக்கத்தொடங்கினாள். மாலைநேரம் நெருங்குதலும் கணவன் நினைவும் அதனையடுத்து அவன்பிரிவுணர்ச்சியும் வரக் 'கணவனைப் பிரிந்திருக்கிற நமக்கு இம் மாலைப்பொழுதிற்கு இது என்னபயன் படுவது? என்று தொடுத்துக்கொண்டிருக்கிற மலர்மாலையை யெறிந்து வருந்தினாள் என்பது கருத்து.

மாலைநேரத்தில் வழக்கமாக நிகழும் உலகநிகழ்ச்சிகளில், கம்மாளர் தம் கருவிகளை ஒடுக்குதலும், பெண்கள் மலராய்ந்து தொடுத்தலும் உடனிகழ்வனவாம். அதனால் ஒடுக்கிய என்னும் (செய்பிய வாய்பாட்டு) வினையெச்சம் உடனிகழ்ச்சிப்பொருளில் வந்தது. ஒடுக்குதல் - பரந்துகிடக்கும் கருவிகளை ஓரிடத்துக் கூட்டிவைத்தல். ஓரிடத்தும் மாலை என்பதில் குவ்வுருபு தொக்கது. இக்கவியுள் மாலைவரவில் ஒத்துநிகழும் உலகநிகழ்ச்சிகளையறிவிக்கும் அழகையறியாராய், ஒடுக்கிய என்பதனைப் பெயரெச்சமாக்கினர் இருவர். அன்றியும் இம்மாலை என்பதற்கு மலர்மாலையென்றும் கலுழ்ந்தாள் என்பதற்கு அழுதாள் என்றும் உரைகூறினர். அவற்றின் பொருத்தமின்மையும் நோக்கிக்கொள்க.

[தொடரும்.]

ஸ்ரீ:

திருக்குருகூர்த் திருப்பணிமாலை

[திரு. L. ஆதிநாதபிள்ளையவர்கள், ஆசிரியர், ஆழ்வார்திருநகரி.]

[கஉஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி]

110 வரிசைபெறு தொளாயிரத்தெண் பத்தா றூண்டில்
வரும்பிர மோதூத வருடந் தன்னில்
திருவுலவு திருமாசி விசாகந் தன்னிற்
றிகழாதி மால்மாறர் சிந்தை கூரத்
தருவிளா மிச்சம்வே ராலி ரண்டு
சப்பரஞ்செய் தழகுடனே சமர்ப்பித் தானல்
சுருதிகுல முக்கியனண் ணுச்சி ராய
சமுகன்வள்ளி நாயகத் துரைச்சிங் கமே.

111 வாமனெனும் பொலிந்தநின்ற ராதிமால் திருவுள்ள
மகிழ்ச்சி யாகப்
பூமகளும் பொருந்திவளர் புயமார்பிற் கனகவங்கி
புகழச் செய்தான்
ராமனெனுங் கச்சிநகர்க் கோவிந்த ராயனருள்
நன்மைப் பாலன்
சோமனெனும் புயவீம ராயமக ராசனெனும்
சுகிர்த வேளே.

---

110 கொல்லம் 986-ஆம் ஆண்டு (கி. பி. 1811) அண்ணுச்சிராயன் வள்ளிநாயகம் என்பவர், ஆழ்வார்க்கும் பெருமாளுக்கும் வேட்டிவேர்ச்சப்பரம் செய்தளித்தார்.

111 கச்சிக் கோவிந்தராயர்மகன் வீமராயமகர்ராயர் என்பவர் ஆதிநாதப்பெருமாள் மார்புக்குப் பொன் அங்கி பொலியச்செய்தார். வாமன் - அழகன். கனக அங்கி - பொன்னங்கி.

112 குருகைநகர் மீதில்வளர் ஆதிமான் மாயன்மகிழ்
கூர வேதான்
வரிசையுடன் வண்டுவரா பதியின்முனி கட்டில்
மாருதியை யிந்நாள்
துரிதமுடன் கனகமதாற் பூசியுயர் கீர்த்தியுமே
துலங்கச் செய்தான்
தருவடருங் கச்சிநகர் வீமரா சேந்த்ரனெனுங்
தன்ம வானே.

113 நாட்டுந்தொ ளாயிரத் தெண்பத் திரண்டாண்டில்
நலமான தனுவென்மாதம்
நாரண மாலாதி மகிழ்மாற ரிருவர்க்கும்
நம்பித் தனங்கள் செயவே
பாட்டுடைய வெதிராச னுக்குரிய கைங்கரியம்
பண்ணுமுனி வரருளேதான்
பதிவாக வேங்கடா சாரியர் மேன்மைபெறு
பதசீனி வாசாரியர்
வீட்டுடைய மால்திரு வடியையங் காரெனும்
வேதரா மானுஜார்யர்
வெல்லுமத ஞனவாழ் வாரையங் காரையும்
விதமுள அர்ச்சனைசெயத்
தீட்டுபுகழ்த் திரைராம சாமியதி காரத்திற்
றிறமாக நேமித்ததாற்
செகமெலாம் புகழுவே யாராத னஞ்செய்து
சித்தியுற முத்திபெறவே.

---

112 கச்சி வீமராயரென்பவர் வண்டுவராபதிமுனிகட்டில் உள்ள மாருதியைப் பொற்பூச்சுப் பூசிவைத்தார்.

113 ராமசாமிநாயக்கர் என்பவர், இ. பி. 1807-ல் 982-ஆம் ஆண்டு மார்கழிமீ ஆழ்வார்க்கும் பெருமாளுக்கும் நம்பியாராக வேலைசெய்ய உடையவர்கைங்கர்யம்புரியும் வேங்கடாசார்யரையும், சீனிவாசாசார்யரையும், பெரியதிருவடியையங்காரென்னும் வேதராமானுஜாசார்யரையும், ஆழ்வாரையங்காரையும் ஏற்படுத்தினார்.

114 குயிலுலவு மலர்ச்சோலை மாலாதி நாதர்பதம்
கும்பிட் டேத்தும்
பயில்சுருதித் தமிழுரைத்த ஞானதே சிகர்தமக்குப்
பண்பாய்த் தானே
வெயில்விரியும் வெள்ளியினுற் றக்கதோ ளுக்கினியான்
விளங்கச் செய்தான்
வயிணவர்சூழ் துரந்தரிகன் ராமாநு சையங்கார்
வரிசை மாலே.

115 அருமைபெறு குருகைநகர் நம்மாழ்வார் சந்நதிக்
கன்பு கூர்ந்தே
திருமஞ்ச னத்தோட்டி யளிக்கதவும் பொற்பணியாய்த்
திகழச் செய்தான்
தருமமிக வானமா மலைமுனிவன் கமலமலர்ச்
சரணம் போற்றும்
வரிசைபெறு சடகோப ராமாநு சச்சீயர்
மறைவல் லோனே.

116 குருகையில் வளர்நெடுமா லாதிநா யகர்சரணங்
கும்பிட் டேத்தும்
மருமகிழ் மாலிகைஞான தேசிகன் பவனிவர
மகிழ்ந்தே பண்பாய்
மருக்கமழுங் தென்புகுழூர்ச் சுடலைமகள் நாகரத்ன
மாணிக் கந்தான்
திருநிறையும் வெள்ளியினுற் பிரபையுண் டாக்கிமிகச்
சிறப்புற் றாளே.

---

114 இராமாநுஜையங்கார் ஆழ்வாருக்கு வெள்ளித்தோளுக்கினியான் செய்தளித்தார். ஞானதேசிகர் - சடகோபர்.

115 வானமாமலைமுனியடியார் சடகோபராமானுசசீயர் என்பவர் ஆழ்வாருக்குப் பொன்னுல் திருமஞ்சனத்தோட்டியும் அளிக்கதவும் செய்து வைத்தார்.

116 திருக்கோளூர்ச் சுடலைமகள் நாகரத்னமாணிக்கம் என்பவர், ஆழ்வார் பவனிவர வெள்ளிப்பிரபை செய்தார்.

117 கொந்தலவு மலர்ச்சோலைக் குருகைமா லாதிபதம்
குப்பிட் டேத்தும்
செந்தமிழ்க் கவிவாணர் திருஞான தேசிகர்க்குச்
சிறப்பாய் நல்ல
சந்திரன்போ லொளிதிகழச் சூடரவம் செய்துபெருந்
தகவே பெற்றாள்
அந்தாத் தியலரம்பை யானையப்ப மாணிக்க
மருமை மாதே.

118 குலவுதமிழ்த் திருவழுதி நாடு வாழி
கோடாத வேந்தருஞ்செங் கோலும் வாழி!
உலகுபுகழ் குருகைமா நகரம் வாழி
உயர்ந்தோங்குந் தலந்தானம் சமயம் வாழி!
நலமிகுவண் சடகோபன் வாழி யாதி
நாதனொடு தேவியர்கள் நாளும் வாழி!
இலகியசெம் பொற்பணிகற் பணிகள் வாழி
இசைந்ததிருப் பணிமாலை இனிது வாழி!

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஐயவினாத்தொடர்

[கசஅ-ஆம்பக்கத் தொடர்ச்சி.]

வினா—12.

'கூளிநிரைக்கநின்று' என்னும் முதற்குறிப்புடைய 151-ஆம் பாட்டின் விசேடவுரையிறுதியிற் காணப்படும்

"இறந்தகாலவுட்கோள் குறிப்பு நுட்பம்."

என்னும் வரியால் விளக்கப்பட்டபொருள் என்னை ?

வினா—13.

(1) 'செழுங்கார்முழவதிர்' என்ற முதனினைப்புடைய 157-ஆம் பாடலின் விசேடவுரையுள்,

" 'மைந்தனே'யென்பது பாடமாயின் ஆண்மைத்தன்மை தோன்ற நின்றதாகவுரைப்பாருமுளர்"

என்று ஒருவாக்கியம் காணப்படுகின்றது. அவ்வாக்கியம் எதன் கூறிமறுத்தல் என்னும் தலைப்புடனும் முன்னும் பின்னும் உள்ள உரைத்தொடரோடும் இயையுமாறென்னை ?

(2) மேலும் அவ்வுரையிறுதியில்,

"அலங்காரம் எதிர்காலக்கூற்றிடத்துக் காரியத்தின்கண் வந்த இரங்கல்விலக்கு,—உபாயவிலக்கு"

என்று ஒரு வாக்கியம் உள்ளது. இதுவரை அலங்காரங்களை விளக்காத ஆசிரியர் இங்கும் பின் 161, 162, 185, 195, 202, 217, 233, 234, 289-ஆம் பாட்டுக்களின் உரைகளிலும் மட்டும் அலங்காரங்களைக் குறித்துச்செல்வது எதுபற்றி ?

வினா—14.

'கூடாரரண்' என்று தொடங்கும் 161-ஆம் பாடலின் விசேடவுரைமுடிவில் "இவ்வாறுகூறவும் வாளாகிடப்பிற் றுய் துயின்றுளென்றறிதல் பயன்" என்று கூறியவர், மீட்டும் "பயன் இடையீடாராய்தல்" என்று குறித்தது கூறியதுகூறலாகாதா ? மேற்குறித்தவற்றுள் பயன் என்று கொள்ளத்தக்கது எது ? ஏன் ?

வினா—15.

(1) 'பைவாயரவுமறியும்' என்று தொடங்கும் 170-ஆம் பாடலுள், 'பெருமலர்க்கண்' என்பதற்குப் 'பெரியமலர்போலுங்கண்' என்று பதவுரைவரைந்து, பின், விசேடவுரையுள், 'மலர்க்கணென்பது உவமைகருதாது கண்ணென்னுந்துணையாய்நின்றது" என்று வரைந்தது முன்னொடு பின் முரணாதா?

(2) மேலும் இச்செய்யுளின் விசேடவுரைமுடிவில், "பயன் வரைவுகடாதல்" என்று காணப்படுகிறதே. இச்செய்யுளின் நுவல் பொருளும் தலைப்புமாகிய வரைவுகடாதல் என்னும் கிளவியே பயனுவதெப்படி?

வினா—16.

(1) 'தாயிற்சிறந்தன்று' என்னும் முதனினைப்புடைய 204-ஆம் பாடலின் விசேடவுரைத்தொடக்கத்தே, "தாயினுஞ் சிறந்தன்று நாணென்றுரைப்பினுமமையும்" என்றுள்ள உரைத்தொடர், அமையுமாறென்னை?

(2) அவ்விசேடவுரையுள் மேலும், "நாணென்பது ஒரு பொருட்குரிமையாதலிற் றுயென வொருமைகூறினார்" என்பது எதனை விளக்க எழுந்தது?

வினா—17.

'மற்பாய்விடை' என்னும் முதனினிப்புடைய 208-ஆம் பாசுரத்தின் விசேடவுரையுள் 'மல்லல் மல்லெனக் கடைக்குறைந்து நின்றது' என்றுள்ள உரைத்தொடர், பாசுரத்தின் பொருளை முற்றுவித்துப் பின் கொளுவுக்குப் பொருளுரைத்துச் செல்லும் உரைநடைமுறை பிறழும்படி கொளுவுக்கு உரைகூறியபின் பாசுரச்சொற் கிலக்கணம் விரிப்பதாயிருப்பது பொருந்துமா?

வினா—18.

'பாம்பயன்' என்று தொடங்கும் 251-ஆம் பாட்டின் விசேடவுரையுள், 'பயன்—இரவுக்குறியிட முணர்த்துதல்' என்று காணப்படுவது. பொருந்துமாறென்னை?

வினா—19.

(1) 'சிறுர்கவன்' என்னும் முதனினைப்புடைய 252-ஆம் செய்யுளின் விசேடவுரையுள் "கோவையும் தொகையும்.....உரைப் பிறும் அமையும்" என்னும் உரைத்தொடர்க்கு விளக்கம் வேண்டும்.

(2) இப்பாட்டுரையின்முடிவிற் குறித்த பயனுகிய குறிப்பிட முணர்த்துதல் என்பது பொருந்துமாறென்னை?

வினா—20.

கள்ளினம் என்று தொடங்கும் 295-ஆம் பாட்டின் விசேட வுரையுள், 'இதனை மிகைமொழிப்பாற்படுத்திக்கொள்க' என்றார். இதனுள் இது என்று சுட்டியது எதனை? மிகைமொழியாவது யாது? மிகைமொழிப்பாற்படுத்திக்கொள்ளுமா றென்னை?

இங்ஙனம்,
ஒரு மாணவன்.

உ

அம்பிகை நவமணிமாலை

கட்டளைக்கலித்துறை.

நீணற் றவற்குஞ்ச ரோருகத் தோனுக்கு நின்மலற்குஞ்
சேணுற் றவர்க்குமெட் டாதபொற் றுளெஞ் சிரத்தில்வைத்தே
காணத் தவந்தந் தடிமைகொண் டாளண்டங் காக்குநவ
கோணத் தவளிவ ளேயென்னை யாளுங் குலதெய்வமே. (க)

நடுத்திருப் பாற்கடற் கேயிருப் பாளெம்மை நாளுமுகங்
கடுத்திருப் பாளல்லள் காய்ந்திருப் பாளல்லள் காய்பவரை
யடுத்திருப் பாளல்லள் தம்மடி யாரை யடுத்தவர்க்குக்
கொடுத்திருப் பாளிவ ளேயென்னை யாளுங் குலதெய்வமே. (உ)

நாமவ ளெல்லை யறியப் படாநவ கோணத்தளாஞ்
சாமள வல்லி சதானந்த வல்லி சதுமறைக்கே
யாமள வல்லி யிமையாத வல்லி யிமையவல்லி
கோமள வல்லி யிவளென்னை யாளுங் குலதெய்வமே. (௩)

பொறைபற்ற சிந்தைக்கு நாளுமிங் கேசெயும் பூவொடுதேன்
நறைபற்ற பூசைக்கு நாடிவர் தாளெங்க ளாதரிடம்
நிறையுற்ற பேரின்ப வாழ்வுக் கெலாம்வந்து நேர்பட்டொன்றாய்க்
குறைபற் றிருப்பவ ளேயென்னை யாளுங் குலதெய்வமே (௪)

வேத்திருப் பாணவ கோணத்து ளெங்களை வேணுமென்றே
காத்திருப் பாள்கலி வந்து புகாமலென் கண்கலக்கம்
பார்த்திருப் பாளல்ல ளெங்கேயு மங்குச பாசங்கையிற்
கோத்திருப் பாளிவ ளேயென்னை யாளுங் குலதெய்வமே. (௫)

பண்டிருப் பாணவ கோணத்து ளுங்கள் படுந்துயராங்
கண்டிருப் பாளொரு கன்னெஞ்சி யோவென் கருத்தினுள்ளே
தண்டிருப் பாள்வந் திருந்துகொண் டெஞ்செயல் தன்செயலாக்
கொண்டிருப் பாளிவ ளேயென்னை யாளுங் குலதெய்வமே. (௬)

வடிவாகுஞ் சீர்நவ கோணத்த ளாவிக்கு வாழ்வுபெறும்
அடியார் பெருமைக் கவமுமுண் டோவடி யாருமொரு
படியாகி யென்னைத்தன் கண்ணின் கருணை ....
குடியாகக் கொண்டிருப் பாளென்னை யாளுங் குலதெய்வமே. (௭)

எங்கருத் தாய்ந்து தலைமுறை யாண்டவ ளெங்குடிக்கா
நங்கிருந் தாணவ கோணத்து ளேயெங்கள் நாதரிடப்
பங்கிருந் தாளிவ ளெப்போது நான்மறைப் பங்கயப்பூங்
கொங்கிருந் தாளிவ ளேயென்னை யாளுங் குலதெய்வமே. (௮)

படியிருப் பாளரன் பூசிக்க வார்பரஞ் சோதிதம்பக்
கடியிருப் பாளரன் கைத்தலத் தேயென் கருத்தினுள்ளே
யடியிருப் பாய்வந் திருந்துகொண் டேபர மானந்தமாய்க்
குடியிருப் பாளிவ ளேயென்னை யாளுங் குலதெய்வமே. (௯)

குறிப்பு:— இந்த 'அம்பிகை நவமணிமாலை' தஞ்சாவூர் அரண்மனைச் சரசுவதிமால் நூல்நிலையத்தில் உள்ள சிதைந்த ஏட்டிலிருந்து என்னால் பிரதிசெய்யப்பட்டது. இதனைத் தேவிவழிபாடாற்றும் அன்பர்களும், ஏனை மெய்யன்பர்களும் பாராயணம் செய்வதற்குதவியாக வெளியிடலாயிற்று.

வித்வான், தி. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை,

திருக்குடந்தை.

உ

தமிழெழுத்துச்சீர் திருத்தம்

BY

திருவாளர். D. மனுவேல் B.A., L.T., அவர்கள்

(Retired Headmaster, U. C. High School, Madhurai)

சில காலமாகப் பல பத்திரிகைகளில் தமிழெழுத்துக்களிற் சில சீர்திருத்தங்களைச்செய்வதின் அவசியத்தைப்பற்றிய கட்டுரைகள் வந்துகொண்டிருக்கின்றன. முக்கியமாக எழுத்துக்களின் தொகையைக் குறைப்பதிற் பலர் கவனம்செலுத்திவருகின்றனர்.

இத்துறையில் முதன்முதல் முயற்சிசெய்தபெருமை 'விடுதலை' ஆசிரியராகிய ஈரோடு திரு. இராமசாமிநாயக்கரைச் சாரும். உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் புணர்ந்து உயிர்மெய் யெழுத்துக்களமைவதில் அவர் புகுத்தியுள்ள சில மாறுதல்கள் தமிழன்பர்கள் யாவராலும் வரவேற்கப்படத்தக்கனவாகும். அவர் ணா, றா, னா; ணை, லை, ளை, னை என்னும் எழுத்துக்களை விலக்கி அவற்றுடன்சேர்ந்த உயிருறுப்புக்களுக்குப்பதிலாக மற்ற மெய் யுறுப்புக்களுடன் சேர்க்கப்படும் ா, ை என்னும் துணையெழுத்துக் களை உபயோகிப்பதன்மூலம் தமிழ் எழுத்துக்களின் உருவங்களில் ஏழைக் குறைத்திருக்கின்றார்.

இத்திருத்தங்களைப்பற்றி மற்றப்பிரமுகர்கள் பலநாட்களாகப் பராமுகமாயிருந்தபோதிலும் சமீபகாலத்தில் 'சுதேசமித்திரன்' ஆசிரியர் தமது பத்திரிகையின் தலையங்கங்களில் அவற்றை உபயோகித்துவருவது அவருடைய பரந்த மனப்பான்மையைக் காட்டுவதாகும்.

திரு. ஈ. வெ. ரா. அவர்களுடைய திருத்தங்களை ஏற்றுக் கொண்டதுடன் அமையாது சுதேசமித்திரன் ஆசிரியர் தமிழெழுத் துச் சீர்திருத்தப்பாதையில் மேலும் ஓர் அடியெடுத்துவைத்துச் சிறந்த மொழித்தொண்டாற்றியுள்ளார். அதாவது இ, ஈ

என்னும் உயிர்களை ஏற்றுவரும் உயிர்மெய்யெழுத்துக்கள் 36 இருக்கின்றன. அவற்றிலுள்ள உயிருறுப்புக்களைத் தனியாகப் பிரித்து மெய்யுறுப்புக்களின்பின்னால் இடுவதினால் இவ்வகையெழுத்துக்களின்தொகையில் 34 குறைக்கப்பட்டிருக்கின்றது. இத்திருத்தத்தினால் அச்சகத்திலுள்ள எழுத்துப்பெட்டிகளில் 34 அறைகள் குறையும். அன்றியும், டைப்ரைட்டரில் இ, ஈ என்பவை புணர்ந்த உயிர்மெய்யெழுத்துக்களைக்குறிக்க இடும் ஆறு குறியீடுகளுக்குப் பிரதியாக ி, ீ என்ற இரண்டு குறியீடுகளே போதுமானவையாகும்.

மேற்சொல்லிய இருபிரமுகர்களுக்கும் புலனாகிய குறைபாடுகளைப்பார்க்கினும் உ, ஊ என்னும் உயிரெழுத்துக்கள் மெய்யெழுத்துக்களுடன் புணர்வதாலுண்டாகும் உயிர்மெய்யெழுத்துக்களே தமிழ்நெடுங்கணக்கிலேயே மிகுந்த தொந்தரவுக்கிடமாயிருக்கின்றன. இப்புணர்ச்சிகளாலேற்படும் எழுத்துவேறுபாடுகள் பின்வருபவையாம்:—

க் + உ = கு	க் + ஊ = கூ
ச் + உ = சு	ச் + ஊ = சூ
ண் + உ = ணு	ண் + ஊ = ணூ
ப் + உ = பு	ப் + ஊ = பூ
ட் + உ = டு	ட் + ஊ = டூ

இவைபோன்றே இவ்விருவகைகளைச்சேர்ந்த மற்ற உயிர்மெய்யெழுத்துக்களும் அமைந்துள்ளன. இவற்றிலுள்ள உயிருறுப்புக்கள் மெய்யெழுத்துக்களுடன் சேரும்பொழுது மெய்யெழுத்துக்களுடைய உருவத்திலும் சிறிது மாறுதலேற்படுவதனால் ஒவ்வொரு புணர்ப்புக்கும் தனித்தனியெழுத்துக்கள் அவசியமாயின. இவ்வெழுத்துப்பெருக்கைத்தவிர்க்குமுகத்தான் ஓர் புதியமுறையைத் தமிழ்ப்பெருமக்கள் சமூகத்தில் சமர்ப்பிக்கின்றேன்.

அதாவது, இப்பொழுது தமிழில் வழங்கிவரும் வடவெழுத்துக்களாகிய ஜ, ஸ, ஷ முதலியவற்றுடன் உ, ஊ என்ற உயிரொலிகள்

சேரும்பொழுது உபயோகிக்கப்படுகின்ற உயிர்க்குறிகளாகிய ¬, ¬ என்னும் உருவங்களையே எல்லாத் தமிழெழுத்துக்களின் பின்னும் வைக்கலாம் என்பதேயாம். இத்திருத்தத்தை ஏற்றுக்கொள்வதாயிருந்தால் இவ்விருவகையெழுத்துக்களின் தொகையிலும் 34 குறையும்.

தற்சமயம் டைப்ரைட்டரில் இவ்விருவகைசம்பந்தமான எழுத்துக்கள்மாத்திரம் 25 இருக்கின்றன. அவையெல்லாவற்றையும் ஒழித்துவிட்டு மேற்காட்டிய இரண்டு உயிர்க்குறிகளைமாத்திரம் வைத்துக்கொண்டாற் போதும். உ, ஊ சம்பந்தமான இத்திருத்தங்களைச் செய்வதற்குப் புதிய எழுத்துக்களை வார்க்கவேண்டிய அவசியமில்லை. முன்னமே உபயோகத்திலிருக்கின்ற எழுத்துறுப்புக்களை வைத்துக்கொள்ளவேண்டியதுதான்.

கல்விபயிலும் சிறுருக்குத் தற்சமயமுள்ள பலவகைப்பட்ட எழுத்துக்களாற் பெரிதும் இடர்ப்பாடிருக்கின்றமையால், அவ்விடர்ப்பாட்டினை நிவர்த்தித்து, எழுத்துக்களைச் சுலபமாய்க் கற்பிக்க இவ் வெளியமுறை மிக்க உதவியாயிருக்குமென உறுதியாய்நம்புகின்றேன். மேலும் இம்மாறுதலினல் எழுத்துக்களின் தொகை மிகமிகக்குறைந்து அச்சிடுவோருக்கும், டைப்தொழிலாளிகளுக்கும் அதிக வசதியேற்படுமென்றும் எதிர்பார்க்கின்றேன். இப்பொழுது அச்சுக்கோப்பவர்கள் உபயோகிக்கின்ற 120 அறைகளுக்கதிகமாயுள்ள இரண்டு பெட்டிகளுக்குப்பதிலாக, சுமார் அறுபது அறைகளுக்கு மேற்படாத ஒரேபெட்டி போதுமானதாயிருக்கும்.

பழைய எழுத்துக்களையும் பழக்கவழக்கங்களையும் மாற்றிக்கொள்ள மனமில்லாதவர்களுக்கு இச்சீர்திருத்தயோசனைகள் கலக்கத்தையுண்டுபண்ணலாம். ஆனல் மற்ற உயிர்களை ஏற்றுவரும் உயிர்மெய்யெழுத்துக்களிலெல்லாம் உயிர்க்கூறுகள் தனித்துநிற்கும்போது இ, ஈ, உ, ஊ என்ற நான்குவகைகளில்மாத்திரம் அவை மெய்யுறுப்புக்களுடன் ஒட்டிக்கொண்டுதான் இருக்கவேண்டும் என்ற கட்டாயமேன்?

சிலநாட்களுக்கு முன் ஸ்ரீ L. S. கரையாளரவர்கள் தமிழ் மொழிக்கு 42 எழுத்துறுப்புக்கள் போதுமானவையென்று சட்ட சபையிற் கூறியதாகப் பத்திரிகைவாயிலாய் அறிந்தேன். ஆனால் இக்கட்டுரையிற் காட்டியுள்ள முறையைப் பின்பற்றினால் அவ்வெழுத்துறுப்புக்கள் 39ல் அடங்கிவிடுமென்பது தெளிவாகும். அவையாவன :—

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஃ.

ா ு ி ீ ூ ெ ே ை

க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன என்பவையாம்.

இவற்றுடன் ஜ, ஸ, ஷ, க்ஷ, ஹ என்னும் வடவெழுத்துக்களையும் சேர்த்துக்கொள்ளலாம். கமா, முற்றுப்புள்ளி முதலிய குறியீடுகளையும், எண்களையும், வருடம், மாதம், தேதி முதலியவற்றிற்கு உபயோகமாகும் கூட்டெழுத்துக்களையும் சேர்த்துக் கொண்டாலும் மொத்தம் 70 எழுத்துறுப்புக்களுக்கதிகமிராது.

'பழையனகழிதலும் புதியனபுகுதலும், வழுவல காலவகையினானே' என்னும் சூத்திரத்திற்கிணங்க நான் மேலேகூறியுள்ள முறைகளைத் தமிழன்பர்கள் ஏற்றுக்கொண்டு நடைமுறையிற் கொண்டுவருவார்களாயின், பின்வரும் கோடானுகோடி சந்ததியினரின் நிரந்தரநன்றிக்குப் பாத்திரராவர் என்பது நிச்சயம்.

குறிப்பு:— மேலே காட்டிய சீர்திருத்தங்கள் கற்பார்க்கு எளியன; உயிரெழுத்துக்களின் வரிவடிவில் ஒரோருபகுதியைக் குறியீடாகக்கொண்டமைந்தன; முன்னோர்கையாண்ட முறையோடுபொருந்தியன; அச்சுப்பெட்டியில் மிகச்சுருங்கிய அறைகளில் அடங்குவன; அச்சுக்கோப்பவரும் பயில்வோரும் இடர்ப்படாது கையாளத்தக்கன. இத்திருத்தங்களைத் தமிழ்மக்கள் ஆதரித்து மொழிவளர்ச்சிக்குதவுவார்களென்று நம்புகிறோம்.

பத்திராசிரியர்.

மதிப்புரை

அரிச்சந்திரவெண்பா:—[திருவாங்கூர்ப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பதிப்புத்தொடர்—3. பரிசோதகர்: மேற்குறித்த பல்கலைக்கழகத்துத் தமிழ்ப்பேராசிரியர் உயர்திரு. ராவ்ஸாஹிப். மு. இராகவையங்காரவர்கள். விலை: ரூ 1-12-0 கிடைக்குமிடம்: திருவாங்கூர்ப்பல்கலைக்கழகம்.]

அறங்களில் தலையாய வாய்மைகாத்துப் பொன்றாத புகழுடம்பால் என்றும் நின்ற அரிச்சந்திரன்சீர்த்தி உலகம் அறிந்ததொன்று. அவன் வாய்மையொன்றால்மட்டுமன்றி வண்மையாலும் திண்மையாலும் மனுநீதிமுறையாலும் நிறையாலும் பொறையாலும் நிலவேந்தருள் நிகரற்றவன். அவன்புகழாயெழுந்த காவியங்கள் பல. அவற்றுள் சேதுநாட்டைச்சார்ந்த நல்லூர் வீரை ஆசுகவிராயர் இயற்றிய அரிச்சந்திரபுராணத்துக்கு முதனூலாகிய பெருமையையுடையது இவ் அரிச்சந்திரவெண்பா என்பது. உத்தேசம் ஐந்நூற்றாண்டுகளுக்குமுன் இயற்றப்பட்டதாகக் கருதத்தக்க இவ்வெண்பாநூலை ஆக்கியளித்தவர் பெயர் முதலிய விவரமொன்றும் தெரியவில்லை. எனினும், இதனுள் அமைந்த வெண்பாக்கள் சொல்லாற் பொருளாற் சுவைசிறந்து அச்சொற்றொடர்ந்துசெல்லும் ஒழுக்காலும் சீரியவாய் விளங்குகின்றன. உரைப்பாட்டுக்களோ வெண்பாக்களிற் பொருளோடு ஆண்டைக்கின்றியமையா யாவையும் விளக்கிநிற்பன. இவ்வெண்பாவும் உரைப்பாட்டும் இச்சரிதத்தை நாடகமாக நடித்துக்காட்டுவார் பேச்சாதற்கும் ஏற்ற தகுதியுடையன. இவற்றின் அமைதிகொண்டு இந்நூலாசிரியர் பாரகாவியம் பாடும் பேராற்றல்வாய்ந்தவர் என்பதனை அறியலாம். இந்நூலின் அழகுகளெல்லாம் புலனாக இதனை நன்கு ஆராய்ந்து அச்சிட்டுதவிய திருவாங்கூர்ப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப்பேராசிரியர் உயர்திரு. ராவ்ஸாஹிப். மு. இராகவையங்காரவர்களுடைய தமிழ்ப்பணி யாவராலும் போற்றத்தக்கது. இதனுள் 165-ஆம் வெண்பாவின் மூன்றாமடியும் 297-ஆம் வெண்பாவின் தனிச்சீரும்

முறையே "எடுக்கும் கவிகையிலே திப்போ தெவர்க்கும்" என்று அல்லது "எடுக்கும் கவிகையீ திப்போ தெவர்க்கும்" எனவும், "பயில்தாபை" எனவும் இருப்பிற் றளைவழுவகன்று சிறக்கும். 174-ஆம் வெண்பாவின் முதலடி "இப்புலன்கள் நான்கிற்கும் இல்லா திருந்தபுலே" என்றிருப்பிற் பொருளொடுபொருந்திச் சிறக்கும்.

திருவேங்கடவுலா — குறிப்புரையுடன் (ஸ்ரீவேங்கடேசுவரன் கீழைத்திசைக் கலையாராய்ச்சிக்கழக வெளியீடு-23):—[குறிப்புரை யாசிரியர்: திருவாளர் வித்வான் T. P. பழனியப்பபிள்ளை B. O. L. அவர்கள். விலை ரூ 1—8—0. கிடைக்கும் இடம்: திருப்பதி ஸ்ரீவேங்கடேசுவரன் கீழ்த்திசைக்கலையாராய்ச்சிக்கழகம்.]

திருவேங்கடவுலா என்பது வடவேங்கடத்திறைவனாகிய நிலங் கடந்த நெடுமுடியண்ணல் பவனிவருதற்சிறப்பினைப் பேசுவதொரு தமிழ்ப்பிரபந்தமாகும். 'சொன்னோக்கும் பொருணோக்கும் தொடைநோக்கும் நடைநோக்கும் துறையின் நோக்கோடு எந்நோக் குங்காண இலக்கியமாகி' நின்ற இது 455-ஆண்டுகளுக்குமுன் திரு வேங்கடமுடையான் திருவடித்தொண்டருள்ளே சிறந்தவராகி நிலவிய கந்தாடை இராமாநுஜையங்கார் என்பவரால் இயற்றப்பட்ட தென்று தெரிகிறது. இப்பிரபந்தம் இற்றைக்கு நாற்பத் தெட்டாண்டுகளுக்குமுன் கோயமுத்தூரைச்சேர்ந்த பூளைமேட்டு வித்துவான் மு. வேணுகோபாலசுவாமிநாயுடுஅவர்களால் முதன் முறை மூலமாகமட்டும் பதிக்கப்பட்டதுண்டு. எனினும், இப் பிரபந்தத்தின் பலவகைப்பெருமையும் இனிதுவிளங்க அரிய ஆராய்ச்சிமுகவுரையுடனும் இதனுள் நுவல்பொருளெல்லாம் தெளி வாகவிளங்கும்படி செவ்விய குறிப்புரையுடனும் இதனை வெளி யிட்ட திருப்பதிக் கீழ்த்திசைக் கலைக்கழகத் தமிழாராய்ச்சியாள ரான உயர்திரு. T. P. பழநியப்பபிள்ளை B.O.L. அவர்கள் நன்முயற்சி பாராட்டத்தக்கது. இதன் குறிப்புரை அடுத்த பதிப்பில் மேலும் திருந்திச் சிறப்புறுமென்று நம்புகிறோம். இவ்வுலாவுள் 55-ஆம் கண்ணியின் இறுதித் தனிச்சொல்லாகிய 'எப்போதும்' என்பது முதல் 83-ஆம் கண்ணியில் 'நெஞ்சினிலிருப்போன்' என்பதுவரை

இடைச்செருகல் என்பது முந்திய பதிப்பாலும் விளங்குதலேயன்றி 83-ஆம் கண்ணியிறுதிக் கனிச்சொல்லாகிய 'அப்பேழும்' என்பது 55-ஆம் கண்ணியடிகளோடு இயைந்த எதுகைநயமும் பொருட்பொருத்தமும் உற அமைந்திருத்தலாலும் விளங்கும். திருவேங்கடத்தைப்பற்றி அறியவேண்டியவற்றையெல்லாம் தெரிவிப்பதாய்ச் சுவைகளுக்கு நிலைக்களமாய்த் தேவருள் நெடியோனுன திருமாலுக்கேற்ப உலாக்களுள் நெடியதாய் உள்ள இதனைப் பல வகையிலும் அழகுற அச்சிட்டு வெளியிட்ட திருப்பதி ஸ்ரீவேங்கடேசுவரன் கீழ்த்திசைக் கலைக்கழகம், மேலும் இன்னோரன்ன நூல்வெளியீடுகளால் தமிழ்வளர்த்து நெடிதுவாழ்க.

சைனுவின்கதை:—[சொல்லியவர்: ஸ்யூ சீ. சித்திரம்வரைந்தவர்: காரோலின் ஜாக்ஸன். மொழிபெயர்த்தவர்: சித்திரவாசகம், மின்சாரத்தின்விந்தை, அற்புதவுலகம் முதலியநூல்களின் ஆசிரியரான திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர் B.A., B.L. அவர்கள். விலை: அணு பன்னிரண்டு. கிடைக்கும் இடம்: ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடிப்ரெஸ், சென்னை.]

சைனு நம் பாரதநாட்டொடு தொடர்புடையது; தொன்மை வாய்ந்தது; நாகரிகத்தாற் சிறந்தது; உலக அதிசயங்களில் ஒன்றுன பெரியமதிலையும், ஆயிரமைல் நீளமுடையதாய் இரண்டு பேராறுகளையிணைத்துவிளங்கும் பெருங்கால்வாயினையும் உடையது; பட்டின் பிறப்பிடமாய்நிலவுவது; பலநுண்கலைகளுக்குத் தாயகமானது. இத்தகைப்பெருமைவாய்ந்தநாட்டின் தொன்றுதொட்டு இன்றுவரையுள்ள வரலாறுகள் பலதலைப்பின்கீழ் இப்புத்தகத்துள் சுருக்கமாகவும் விளக்கமாகவும் வரையப்பட்டுள்ளன. சொல்லப்படும் செய்திகளை இனிதுபுலப்படுத்தும் அழகிய சித்திரங்களும் இடையிடை செறிக்கப்பட்டுள்ளன. இதன் வசனநடை இதனை முற்றும் படிக்கும்படி தூண்டும்முறையில் அமைந்தது. நம்நாட்டுச் சிறுவர்களுக்கேற்ற இன்னோரன்ன பாடபுத்தகங்களை எல்லாவகையிலும் சிறப்பும் அழகும் அமைய ஆக்கித்தந்துவரும் திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள்திறத்துத் தமிழ்நாடு நன்றிபாராட்டுங்கடப்பாடுடைத்து.

மிங்கின்கதை:— [எழுதியவரும் சித்திரம்வரைந்தவரும்: சியாங் யீ. மொழிபெயர்த்தவர்: திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L., விலை: அணா 12. கிடைக்கும் இடம்: ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடிப்ரெஸ், சென்னை.]

மிங் என்பது பெரும்பூனைக்காடி; சீனநாட்டுவிலங்குகளில் ஒன்று. இது தன்னாட்டிற்பிறந்ததுமுதல் இங்கிலாந்திற் காட்சிச்சாலைக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கு வாழ்ந்ததுவரையுள்ள செய்திகளை இப்புத்தகம் சித்திரங்களோடு ஒரு கதையாக்கித்தருகிறது; சிறுவர் படிப்பதற்கேற்றவாறு செவ்வியசொற்களால் இயன்ற குறுகியதொடர்களையுடையது. சிறுவர்க்கு அவர் கற்கவேண்டியவற்றைக் கட்டுரையாற்போதிப்பதினும் கதையாற்போதிப்பது நன்று. கதையினால் போதிக்கும் விஷயங்கள் சிறுவர் மனதில் நன்குபதியும். இதனை மொழிபெயர்த்த திரு. அப்புஸ்வாமி ஐயரவர்களைத் தமிழுலகம் நன்கறியும். அவர் இக்கதையை மொழிபெயர்க்கப்பட்டதென்று தோன்றாதபடி நடத்திச்செல்லும் அழகு உற்றுநோக்கியுவக்கத்தக்கது.

மோக்ஷவிசாரம்:— இது, மோக்ஷத்தை (வீட்டை)ப்பற்றிய ஆராய்ச்சியென்று பொருள்படும். வடமொழியுரைநடையுருவில் அமைந்த இதனையெழுதி வெளியிட்டவர் புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் தாநாதிகாரியாயிருந்த ஸ்ரீ உப. வே. வித்வான் வங்கீபுரம் ரங்காசாரியராவர். இதன் விலை ரூபா. 1—8—0. வேண்டுவோர் வித்வான் காளி ரங்காசாரியர், தேரழுந்தூர்ப்போஸ்டு, தஞ்சை ஜில்லா என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

இதில் ஆராய்ச்சியாளர் ஆழ்வார்களுடைய அருளிச்செயல்களிற் கூறப்படும் மோக்ஷம் அத்துவிதநெறிபற்றியதென்று முடிக்கிறார். இதை மறுக்குஞ்சான்றுகளும் அருளிச்செயல்களில் மிகமிகவுண்டு. பரமவைஷ்ணவரும் புலமைநிரம்பியவருமான இவ்வாராய்ச்சியாளர் தரும் இந்தமுடிவு பிறன்கோட்கூறலாக எழுதப்பட்டதுபோலும். இதனாற் பிறர்மதம் மேற்கொண்டுகாட்டிய ஆராய்ச்சியாளர் தாமே அதற்கு மறுதலைமுடிபும் வெளியிடுவாரென்று நம்புகிறோம்.